Appropriate Technology Services
NALLUR
No.

# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது


மலர்: 15 இதழ்: 1 | டிசெம்பர், 1962 | விலை: சதம் 15




## மனித உரிமைச் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் படம்




அகில உலக மனித உரிமைப்பிரகடனம் உலக சரித்திரத்திலேயே முக்யத்வம் வாய்ந்தது. இதில் 30 பிரிவுகள் உண்டு. மனிதரின் எதிர்கால சுபீட்சமும் நல்வாழ்வும் இதிலே தங்கியிருக்கின்றன.

டிசம்பர் 10 ம் திகதி மனித உரிமைத் தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதனுலேயே, மனிதன் மனிதனுக வாழவும் அவனுக்குரிய ஸ்தானத்தைப் பெற்று சுதந்திரமாக வாழவும் வழிபிறக்கும்.

இவ்வருடம் இத்தினத்தைக் குறிக்கு முகமாக சிறப்புக்கட்டுரைகள் இம்மலரில் இடம் பெறுகின்றன.

## பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அகில உலக மனித உரிமைப் பிரகடனம் .. .. .. | 3 |
| 2. | மனித உரிமைப் பிரகடனத்தின் கருத்து .. .. .. | 8 |
| 3. | மாதர்களின் அந்தஸ்தை உயர்த்துதற்கு ஐக்கிய நாடுகளின் பணி .. | 14 |
| 4. | குழந்தை உரிமைப் பிரகடனம் .. .. .. | 17 |
| 5. | சுயநிர்ணயத்துக்கு மக்களுக்கு உள்ள உரிமை .. .. | 18 |
| 6. | ஒரு வேலைத்திட்டம் .. .. .. | 19 |
| 7. | மனித உரிமைத்தினம் .. .. .. | 19 |
| 8. | மனித உரிமைகளுக்கு ஓர் ஆபத்து .. .. .. | 20 |
| 9. | திருவெம்பாவை .. .. .. | 20 |
| 10. | யாழ்ப்பாணம் .. .. .. | 22 |
| 11. | புளியங்கூடல் .. .. .. | 26 |
| 12. | இலங்கைச் சரித்திரக் கதைகள் .. .. .. | 27 |


ஆர் 6606—5,608 (12/62)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 191





வயதுவந்த ஆண்களும் பெண்களும் எவ்வித கட்டாயமுமின்றி சாதி, சமயம், நாட்டினம் ஆகிய கட்டுப்பாடு எதுவுமின்றி தங்கள் விருப்பப்படி மணம் செய்வதற்கு உரிமை இருக்கிறது என்றும் மண விடயத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை யுண்டு என்றும் பிரகடனம் பிரசித்தப்படுத்துகிறது.

# அகில உலக மனித உரிமைப் பிரகடனம்

### பாயிரம்

1948 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தை அங்கீகரித்து வெளியிட்டது. மேலும் இதிற் கூறப்பட்ட விஷயங்கள் சகல அங்கத்துவ நாடுகளிலுமுள்ள பாடசாலைகளிலும் கல்வித்தாபனங்களிலும் வாசித்தும் விளங்கப்படுத்தியும் கூடியவரை பகிரங்கப் படுத்துமாறு பொதுச்சபை சகல அங்கத்துவ நாடுகளையும் கேட்டுக்கொண்டது. அகில உலக மனித உரிமைப் பிரகடனம் வருமாறு :

அஃதாவது மனித குலத்தின் உறுப்பினர் யாவர்க்கும் இயல்பாகவுள்ள மதிப்பையும் மாற்றவொண்ணுச் சம உரிமைகளையும் ஒப்புக்கொள்வதே உலகின் சுதந்திரத்துக்கும் நீதிக்கும் சமாதானத்துக்கும் அடிப்படையாதலாலும்.

மனித உரிமைகளைப் புறக்கணிப்பதும் வெறுப்பதும் மனித குலத்தின் மனச் சான்றினை புண்படுத்தும் அநாகரிகச் செயல்களுக்குக் காரணமாயிருந்துளவாதலாலும், மக்கள், பேச்சிலும் எண்ணத்திலும் சுதந்திரமும், பயம், தேவைகளினின்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA



விடுதலையும், பெற்று மகிழும் ஒரு புற உலகத்தை ஆக்குவது பொது மக்களின் உன்னத இலட்சிய மென்று எடுத்தோதப்படுவதாலும்,

கொடுங்கோன்மை, அடக்குமுறை இவற்றிற்கெதிராக அரசியற்கலகத்தை மனிதன் தனது கடைசி ஆயுதமாகப் பிரயோகிக்கத்துண்டுவதைத் தடுக்க வேண்டுமாகில், மனித உரிமைகள் சட்டப்பிரமாணங்களாற் பாதுகாக்கப்படுவது இன்றியமையாததாலும்,

நாடுகளுக்கிடையே நல்லுறவின் வளர்ச்சியை ஊக்குவது இன்றியமையாததாலும்,

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் அடிப்படையான மனித உரிமைகளிலும், மூலாதார சுதந்திரங்களிலுமுள்ள மதிப்பு உலகெங்கும் வளரவும் கடைப்பிடிக்கவும் உழைப்பதற்கு அங்கத்துவ நாடுகள் பிரமாணஞ் செய்துள்ளனவாதலாலும்,

இச்சூளினை முற்றும் நிறைவேற்றுவதற்கு இவ்வுரிமைகளையுஞ் சுதந்திரங்களையும்பற்றி நன்கு விளங்கிக்கொள்வது மிக்க தலையாயதாலும்,

இப்பொழுது,

ஒவ்வொரு மனிதனுஞ் சமூகத்தின் ஒவ்வோர் உறுப்பும், இப்பிரகடனத்தை எப்பொழுதும் மனத்திற்கொண்டு, போதனையாலும் கல்வியாலும் இவ்வுரிமைகளையும் சுதநதிரங்களையும் மக்கள் மதிக்கும்படி செய்வதற்காகவும், நாட்டின் சருவ தேச முன்னேற்ற முறைகளால் அங்கத்துவ நாடுகளில் வாழும் மக்களும் அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களும் இவ்வுரிமைகளையும் சுதந்திரங்களையும் முழுவதும் நன்குணர்ந்து கடைப்பிடிக்கச் செய்வதற்காகவும், எல்லா மக்களும் எல்லா நாட்டினரும் உரிமை அடையவேண்டிய பொதுக் குறிக்கோளாக இந்த அகில உலக மனித உரிமைப் பிரசுரத்தைப் பொதுச்சபை பிரகடனப்படுத்துகிறது.

**உறுப்புரை 1**

மனிதர் யாவரும் மதிப்பிலும் உரிமையிலும் சமமாயுஞ் சுதந்திரமாயும் பிறந்துளர். பகுத்தறிவும் மனச்சான்றும் அவர்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளன; அவர்கள் ஒருவர்க்கொருவர் சகோதர உணர்ச்சியுடன் நடந்துகொள்ளல் வேண்டும்.

**உறுப்புரை 2**

ஒருவரின் இனம், நிறம், பால், மொழி, சமயம், அரசியல், அன்றிப்பிற அபிப்பிராயம், நாட்டினத்தால், அன்றிச் சமூகத்தால் வந்த தோற்றம், பிறப்பு, மற்றைய தகுதி ஆகியவைகளைப் பற்றிய வேற்றுமைகள் யாவுமின்றி, ஒவ்வொருவரும் இப்பிரகடனத்திற் கூறப்பட்டுள்ள எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெற உரியராவர்.

அன்றியும் ஒருவருடைய நாடோ நிலப்பகுதியோ சுதந்திரமுடையதாயினும், பொறுப்பாட்சிமுறையிலுள்ளதாயினும், சுயவாட்சியற்றதாயினும், வேறு வரையறைகளுக்குட்பட்ட சுதந்திரமுடையதாயினும், அதனுடைய அரசியல்நிலை, நியாயாதிக்க நிலை, சருவதேச நிலை இவற்றைக்கருதி யாதொரு வேற்றுமையுங் காட்டலாகாது.

**உறுப்புரை 3**

வாழ்விற்கும் விடுதலைக்கும் தற்பாதுகாப்பிற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 4**

எவரையும் தொழும்பிலோ அடிமைத்தனத்திலோ வைத்திருக்கலாகாது; எல்லாவிதமான அடிமைத்தனமும் அடிமை வியாபாரமும் தடைசெய்யப்படல் வேண்டும்.

**உறுப்புரை 5**

எவரையும் சித்திரவதைக்கோ, குரூரமான மனிதத் தன்மையற்ற இழிவுபடுத்தும் நடவடிக்கைக்கோ தண்டனைக்கோ ஆளாக்கலாகாது.

**உறுப்புரை 6**

சட்டத்தின் முன்னிலையில், எல்லாவிடத்திலும், மனிதன் என்ற முறையிலே மதிக்கப்படுவதற்கு ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 7**

சட்டத்தின் முன் யாவரும் சமமாவர். வேறுபாடின்றி அச்சட்டத்தின் பாதுகாப்பிற்கு உரியராவர். இந்த வெளியீட்டை மீறும் ஒருதலைச்சார்பிலிருந்தும் அத்தகைய ஒருதலைச் சார்பினை ஊக்கலிலிருந்தும் யாவரும் சமமான பாதுகாப்பிற்குரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறுப்புரை 8**

அரசியலமைப்பினாலோ சட்டத்தினாலோ தமக்கு அளிக்கப்பட்டுள்ள மூலாதாரமான உரிமைகளுக்குப் பங்கமுண்டாக்கும் செயல்களுக்குத் தகுதிவாய்ந்த நாட்டு நீதிமன்றத்தின் மூலம் பயனுள்ள பரிகாரம் தேட ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 9**

எவரையும் எண்ணியவாறு சிறைப்படுத்வோ காவலில் வைக்கவோ நாடுகடத்தவோ கூடாது.

**உறுப்புரை 10**

தம்முடைய உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானிப்பதற்கும் தம்மீது சாட்டப்பட்டுள்ள எந்தக் குற்றத்தையும் பற்றித் தீர்ப்பளிப்பதற்குஞ் சுதந்திரமுள்ளதும் நடுநிலையானதுமான ஒரு நீதிமன்றத்தால் நீதிமுறையிற் பகிரங்கமாக விசாரிக்கப்படுவதற்கு, ஒவ்வொருவருக்கும் பூரண சம உரிமையுண்டு.

**உறுப்புரை 11**

(1) தண்டக்குற்றஞ் சாட்டப்பட்ட எவரும், தம் காப்பிற்குத் தேவையான உறுதிகள் யாவும் அளிக்கப்பட்ட பகிரங்க விசாரணையில் நியாயப் பிரமாணப்படி குற்றவாளியென்று நிறுவப்படும் வரை, குற்றமற்றவரென்று கொள்ளப்பட உரிமையுடையவராவர்.

(2) ஒருவர் செய்த அன்றிச் செய்யாமல் விட்ட காரியம், அந்தச் சமயத்தில், நாட்டின், அல்லது சருவதேசத்தின் சட்டப்படி தண்டனைக்குள்ளாக்கும் குற்றமாகாவிட்டால் அவரைத் தண்டனைக்குள்ளாக்கும் குற்றம் புரிந்தவராகக் கொள்ளலாகாது. தண்டனைக்குள்ளாக்கும் குற்றம் புரியப்பட்டிருந்தால், அங்ஙனம் புரியப்பட்டபோது செயலிலிருந்த தண்டனையினுங் கூடிய தண்டனை அளித்தலாகாது.

**உறுப்புரை 12**

ஒருவருடைய அந்தரங்கம், குடும்பம், வீடு, கடிதப் போக்குவரத்து முதலியவைகளில் மனம்போனவாறு தலையிடுதலாகாது. அவர் நற்பெயரும் புகழுந் தாக்கப்படலாகாது. அத்தகைய தலையீடு அல்லது தாக்குதலிலிருந்து சட்டமூலம் பாதுகாப்புப்பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 13**

(1) தமது நாட்டின் எல்லைக்குள்ளே சுதந்திரமாய்ப் போய்வரவுங் குடியிருக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) அரசியற்றொடர்பற்ற குற்றங்களுக்காகவும் ஐக்கியநாடுகளின் நோக்கங்களுக்குங் கொள்கைகளுக்கும் விரோதமான காரியங்களுக்காகவும் உண்மையாக தமது நாடு உட்பட, எந்த நாட்டையும் விட்டுச் செல்லவுந் தம் நாட்டுக்குத் திரும்பிவரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 14**

(1) துன்புறுத்தலுக்குத் தப்பிப் பிறநாடுகளில் அடைக்கலம் புகுந்து வாழ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு,

(2) அரசியற்றொடர்பற்ற குற்றங்களுக்காகவும் ஐக்கிய நாடுகளின் நோக்கங்களுக்குங் கொள்கைகளுக்கும் விரோதமான காரியங்களுக்காகவும் உண்மையாகவே தொடரப்பட்ட வழக்குக்களுக்கெதிராக இவ்வுரிமையை மறுக்கவோ முடியாது.

**உறுப்புரை 15**

(1) ஒரு நாட்டின் குடியாயிருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) ஒருவரது குடிமையுரிமையை நீக்கவோ மனம்போனவாறு வேறு நாட்டின் குடியாகமாறும் உரிமையை மறுக்கவோ முடியாது.

**உறுப்புரை 16**

(1) வயது வந்த ஆண்களும் பெண்களும் இனம், நாடு, சமயம் முதலிய எத்தகைய கட்டுப்பாடுகளுமின்றி, மணஞ் செய்து குடும்பம் நடத்த உரிமையுடையவர்களாவர். மணத்தின்பொழுதும் மணக்கலைவின் பின்பும் இருவருக்கும் மணம் பற்றிச் சம உரிமைகளுண்டு.

(2) மணஞ் செய்துகொள்ளப் போகும் ஆண் பெண்களின் சுதந்திரமான முழுச்சம்மதத்துடனேயே மணம் நடைபெறல்வேண்டும்.

(3) சமூகத்தின் இயற்கையான அடிப்படைத் தொகுதி அழகே குடும்பமாகும்; ஆகவே சமூகத்தாலும் அரசாங்கத்தாலும் பாதுக்கப்படவேண்டிய உரிமை அதற்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறுப்புரை 17**

(1) தனியாகவோ பிறருடன் சேர்ந்து கூட்டாகவோ உடைமைக்கு உரியராக ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவருடைய சொத்தையும் மனம்போனவாறு பறித்தலாகாது.

**உறுப்புரை 18**

எவர்க்கும் சிந்தனே, மனச்சான்று, சமயம் ஆகிய வற்றிற் சுதந்திர உரிமையுண்டு. இவ்வுரிமை தம்முடைய சமயத்தையோ கொள்கையையோ மாற்றுவதற்குள்ள சுதந்திரத்தையும் தனித்தோ மற்றையவருடன் சேர்ந்தோ பொதுவிலோ தனிமையிலோ தமது சமயத்தை அன்றிக்கொள்கையைப் போதித்தும் பயின்றும் வழிபட்டும் அனுட்டித்தும் வெளிப்படுத்துவதற்குள்ள சுதந்திரத்தையும் அடக்கும்.

**உறுப்புரை 19**

ஒவ்வொருவருக்கும் சிந்தனே வெளியுறுத்தற் சுதந்திர உரிமையுண்டு. இது பிறர் தலையீடின்றிக் கருத்துக்கொள்வதற்குச் சுதந்திரத்தையும் எச்சாதன மூல மாகவேனும் எல்லைக்கட்டுப்பாடின்றி செய்திகளேயுங் கருத்துக்களேயும் நாடிப் பெறவும் தெரிவிக்கவும் உள்ள சுதந்திரத்தையும் அடக்கும்.

**உறுப்புரை 20**

(1) சமாதான முறையிற் சுதந்திரமாகக் கூட்டங் கூட ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) ஒரு சங்கத்திலே சேரவேண்டுமென்று எவரையும் பலவந்தப்படுத்தலாகாது.

**உறுப்புரை 21**

(1) தனது நாட்டின் அரசாட்சியிலே நேராகவோ தான் சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் மூலமாகவோ பங்குபற்ற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) தன்னுட்டின் பொதுச் சேவையில் சமமாக ஈடுபட ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(3) மக்களின் சித்தமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக இருத்தல்வேண்டும்; இச்சித்தம் நேர்மையான, பருவத் தேர்தல்களின் மூலம் வெளிப்படுத்தப்படும். இத்தேர்தல்கள் சருவசன சமத்துவ வாக்குரிமையைக் கொண்டு, இரகசிய வாக்கெடுப்பு முறையாலோ, அதை யொத்த சுதந்திரமான வேறு வாக்கெடுப்பு முறையாலோ நடத்தப்படுபவையாயிருத்தல் வேண்டும்.

**உறுப்புரை 22**

சமூகத்தின் அங்கத்தவர் என்ற முறையில், ஒவ்வொருவரும் சமூக நலனிற்கு உரிமையுடையவராவர். தமது கண்ணியத்துக்கும் தமது தனித்தன்மையின் சுயாதீனமான வளர்ச்சிக்கும் இன்றியமையாதவைகளான பொருளியல், சமூக பண்பாடு என்னும் உரிமைகளே அவ்வந்நாட்டின் அரசியலமைப்புக்கும் வளத்துக்கும் இயைய, நாட்டு முயற்சியின் மூலமும் சருவதேச ஒத்துழைப்பின் மூலமும் பூரணமாய் எய்துதற்கு ஒவ்வொருவரும் உரிமை யுடையவராவர்.

**உறுப்புரை 23**

(1) தொழில் செய்யவும் தொழிலேச் சுயாதீனமாகத் தேர்ந்தெடுக்கவும் நேர்மையும் ஆதரவுமுள்ள தொழில் நிபந்தனைகளேப் பெறவும் தொழிலது நிலேயுறுது பாதுகாப்புப் பெறவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) ஒத்த வேலேக்கு ஒத்த ஊதியத்தை வேறுபாடின்றிப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(3) தொழிலாற்றும் ஒவ்வொருவரும் ஒரு மனிதனுக்கேற்ற கண்ணியத்துடன் தானுந் தனது குடும்பமும் வாழ்வதற்கு உறுதிதரும் நேர்மையான ஊதியத்தைப் பெறவும் தேவையானபோது வேறுவிதமான சமுதாயந்தரும் பாதுகாப்பினே உதவியாகப் பெறவும் உரிமையுடையவராவர்.

(4) தன் நலன்களேப் பாதுகாக்கத் தொழிற் சங்கங்களேயமைக்கவும் அவற்றிற் சேரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை 24**

நேர்மையான முறையில் கட்டுப்படுத்தப்பட்ட வேலே நேரம் ஊதியத்துடன் சேர்ந்த பருவ விடுமுறை ஆகியவை உட்பட ஆறுதலும் ஓய்வும் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புரை 25

(1) ஒவ்வொருவருக்கும் தாமும் தமது குடும்பமும் ஆரோக்கியத்துடன் நல்வாழ்வு வாழ்வதற்கேற்ற உணவு, உடை, உறையுள், மருத்துவ ஆதரவு, தேவையான சமூகச் சேவைகள் ஆகியவை உட்பட்ட வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கும் வேலையின்மை, நோய், தள்ளாமை, கைம்மை முதுமை, தன் இயல்புகடந்த காரணங்களாலாய வாழ வழியின்மை ஆகியவை ஏற்படும்போது பாதுகாப்புப் பெறுவதற்கும் உரிமையுண்டு.

(2) தாய்மையும் குழந்தைப்பருவமும் சிறப்பான கவனத்துக்கும் பாதுகாப்புக்கும் உரியன. மணவழி பிறப்பினும் மணமல்வழி பிறப்பினும் குழந்தைகள் யாவரும் ஒரு தன்மைத்தான சமூகப் பாதுகாப்புக்குரியவராவர்.

உறுப்புரை 26

(1) கல்வி கற்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. குறைந்தது, ஆரம்ப அடிப்படை நிலைகளிற் கல்வியானது இலவசமாக அளிக்கப்படல்வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாய் இருத்தல் வேண்டும். வேலைத்துறைக் கல்வியும் தொழின் முறைக் கல்வியும் பொதுவாக யாவருக்கும் கிடைக்கக் கூடியதாய் இருத்தல்வேண்டும். உயர்தரக் கல்வியும், திறமையை அடிப்படையாகக் கொண்டு எல்லோராலுஞ் சமமாகப் பெறக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.

(2) மனிதனின் தனித்தன்மையை பரிபூரணமாக வளர்க்கவும், மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் கூடிய வழிகளில் கல்வி ஊட்டப்படல் வேண்டும்; நாடுகளுள்ளும், இனங்கள், மதங்கள் ஆகியவற்றுள்ளும் நல்விளக்கம், சகிப்புத்தன்மை, நட்பு ஆகியவற்றை வளர்ப்பதோடு, சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஐக்கிய நாடுகளின் பணிகளுக்கு அது உதவியாயிருத்தலும் வேண்டும்.

(3) தங்களுடைய குழந்தைகளுக்கு எவ்விதமான கல்வி அளிக்கப்படல் வேண்டும் என்பதை முடிவாக்கப் பெற்றோர்களுக்கே முதலுரிமையுண்டு.

உறுப்புரை 27

(1) சமூகத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்குபற்றவும், நுண்கலைகளைச் சுவைக்கவும், விஞ்ஞான முன்னேற்றத்திலும் அதன் பயன்களிலும் பங்குபற்றவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) விஞ்ஞானம், இலக்கியம், நுண்கலைகள் ஆகிய துறைகளில் தாமே ஆக்கியோராயிருந்து ஆக்கியவற்றால் ஏற்படும் அறநலன் பொருள்நலன்களுக்கும் பாதுகாப்புப்பெற ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்.

உறுப்புரை 28

இந்தப் பிரசுரத்திற் காணப்படும் உரிமைகளையும் பூரணமாக அடைவதற்கேற்ற சமூக, சருவதேச அமைப்பில் வாழ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

உறுப்புரை 29

(1) ஒவ்வொருவருக்கும் தம் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகளுண்டு; ஏனெனில் அதிலேயே அவரின் தனித்தன்மை கட்டுப்பாடற்ற பூரண வளர்ச்சி பெறுதல் இயலும் என்க.


(2) தம் உரிமைகளையுஞ் சுதந்திரங்களையும் அனுபவிக்கையில், மற்றையோருடைய உரிமைகளையும் ஏற்று உரியமதிப்பளிப்பதற்கும், சனநாயக சமூகத்தின் அறம், பொதுவொழுங்கு, பொதுநலன் ஆகியவற்றுக்கான நேர்மையான தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமானவையென்று சட்டபூர்வமாகத் தீர்மானிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கே ஒவ்வொருவரும் ஆட்படுத்தப்படலாம்.

(3) இந்த உரிமைகளையுங் கடமைகளையும் ஒருபொழுதும் ஐக்கியநாடுகள் சங்கத்தின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் முரணான முறைகளில் உபயோகித்தலாகாது.

உறுப்புரை 30

இப்பிரகடனத்தில் எடுத்தோதப்பட்டவை எவையேனும் இங்கு கூறிய உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றில் எதனையேனும் அழிக்கும் நோக்கத்துடன் எக்கருமத்தையேனும் ஆற்றவோ எவ்வியக்கத்திலேனும் ஈடுபடவோ எவ்வரசுக்கேனும் எக்கூட்டத்துக்கேனும் எம் மனிதனுக்கேனும் எவ்வித உரிமையையும் அளிப்பதாக விளக்கஞ் செய்தலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணத்தின்போதும் விவாக நீக்கத்திலும் இவர்களுக்குச் சம உரிமையுண்டு.

# மனித உரிமைப் பிரகடனத்தின் கருத்து

(ஐக்கிய நாடுகள் தகவல் நிலையம் உதவியது)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், மனித இனத்தின் மூலாதார உரிமைகளிலும், தனிமனிதனது கண்ணியத்திலும் மதிப்பிலும் ஆண், பெண் என்ற இரு பாலாரது சம உரிமையிலும் தங்களுக்குள்ள நம்பிக்கையைத் தாம் வெளியிட்ட உரிமைச் சாதனம் மூலமாக மீண்டும் உறுதிப்படுத்தியது. மனித உரிமைகளை கௌரவித்து அவற்றை ஊக்குவித்து வளர்க்கவும், இனம், பால், மொழி அல்லது சமயம் என்ற பாரபட்சமின்றி எல்லோருக்கும் மூலாதார சுதந்திரங்களை வழங்குவதிலும் சர்வதேச ஒத்துழைப்பை ஈட்டிக்கொள்வதற்காகவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உண்மையில் ஏற்படுத்தப்பட்டது. இந்நோக்கை அடைதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச்சேர்ந்த எல்லா அங்கத்தவர்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் நவடிக்கை எடுத்துக்கொள்வதென்ன சங்கற்பம் செய்து கொண்டார்கள்.

1945 ம் ஆண்டில் சான்பிரான்சிஸ்கோ நகரில் சாசனம் தயாரிக்கப்பட்டு வருகையில், மனித உரிமைகள் பற்றிய ஒரு சர்வதேச மசோதா தயாரிக்கப்பட வேண்டுமென்று யோசனை கூறப்பட்டது. பின்னர் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் அமைக்கப்பட்டதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட ஒரு மசோதாவைத் தயாரிப்பதையே முக்கிய கடமையாகக் கொண்ட மனித உரிமைகள் பற்றிய ஒரு கொமிஷனை அது ஸ்தாபித்தது. இம் மசோதா கீழ்க்காணும் மூன்று பிரிவுகளைக் கொண்டதாக இருக்கவேண்டுமென மேற்படி கொமிஷன் தீர்மானித்தது.

(1) மனித உரிமைகள் பற்றிய பிரகடனம்.

(2) மனித உரிமைகள் பற்றிய ஒப்பந்தம்.

(3) இவற்றை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கை.

மனித உரிமைகள் பற்றிய பொதுக் கொள்கைகளை அல்லது தராதரங்களை நிச்சயிப்பதற்கு பிரகடனமும், குறிப்பிட்ட உரிமைகளைத் தீர்மானிப்பதற்கும் அவற்றின் உபயோகத்தை வரையறுத்தற்குமென ஒப்பந்தமும், மனித உரிமைகள் மேற்கொள்ளப்படுவதைக் கவனித்துக்கொள்வதற்கு சர்வதேச அமைப்பு ஒன்று அடங்கிய அமுல் நடாத்தும் நடவடிக்கைகளும் இப்பிரகடனத்தில் இடம்பெறவேண்டும் என்றிருந்தன.

இப்பிரகடனத்தின் முதலாவது நகல் 1947 லும் 1948 லும் கொமிஷனால் தயாரிக்கப்பட்டது. 1948 டிசம்பர் 10 ந் திகதியன்று இதன் முடிவான பிரதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### மூலாதாரக் கொள்கைகள்

இப்பிரகடனத்தில் 30 பிரிவுகள் உண்டு. முதலாவது பிரிவு சில மூலாதாரக் கொள்கைகளை வகுத்தளிக்கின்றது. "மனிதர் யாவரும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சுதந்திரராயும் சமத்துவமுடையராயும் பிறக்கிறார்கள். அவர்களுக்குப் பகுத்தறிவும் மனச்சாட்சியும் இயல்பாகவே அமைந்துள்ளன. அவர்கள் சகோதரத்துவ உணர்ச்சியுடன் பரஸ்பரம் கருமமாற்றுதல் வேண்டும்". இது இரண்டு கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகத் தெரிகின்றது. (1) சுதந்திரத்துடனும் சமத்துவத்துடனும் வாழ்வது மனிதனின் பிறப்புரிமையென்றும், இதனை அவனிடமிருந்து பறிக்க முடியாதென்றுமுள்ள கருத்தாகும். (2) புவியில் வாழும் இதர சீவ செந்துக்களிலும் வேறுபட்ட பகுத்தறிவுள்ள ஒழுக்கமுள்ளவன் மனிதன் என்ற கருத்தாகும்.

"இனம், நிறம், ஆண்பெண் வேற்றுமை, மொழி, சமயம் காரணமாக அல்லது அரசியல் சம்பந்தமான அல்லது வேறு விதமான அபிப்பிராயம் காரணமாக அல்லது இன்ன தேசத்தில் அல்லது இன்ன சமுதாயத்தில் இருந்து வந்தமை காரணமாக அல்லது ஆதனம் அல்லது பிறப்பு காரணமாக அல்லது வேறேதும் அந்தஸ்து காரணமாக எவ்விதமான பேதமுமில்லாமல் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்க ஒவ்வொருவரும் பாத்தியதையுடையவராவர்" என இரண்டாவது பிரிவு கூறுகின்றது.

"இனம், ஆண்பெண் வேற்றுமை, மொழி அல்லது சமயம் காரணமாக எந்த விதமான பேதமும் இல்லாது எல்லோருக்கும் மனித உரிமைகளும் மூலாதாரச் சுதந்திரங்களும்" வழங்கப்படுவதை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வளர்க்க வேண்டுமென சாசனத்திலுள்ள ஏற்பாட்டை இது விரித்துக் கூறுகின்றது. ஒருவருடைய தேசம் அல்லது ஊர் சுதந்திரமுடையதாயினும் சரி, தர்மகர்த்தா பரிபாலன முறைக்குட்பட்டதாயினும் சரி, சுவாதீனமற்றதாயினும் சரி அதன் மக்களுக்கிடையே பாகுபாடு இருக்கக் கூடாதென்றும் அப்பிரிவு கூறுகின்றது. வேறுவிதமாகக் கூறின், எல்லா நாடுகளிலும் ஊர்களிலும் உள்ள மக்கள் அனைவரும் எந்தவிதமான வேற்றுமைகளுமின்றி, பிரகடனத்தில் குறிக்கப்பட்ட எல்லா உரிமைகளையும் அநுபவிக்கப் பாத்தியதை உடையவர்களாவர்.

### சொந்த, சிவில், அரசியல் உரிமைகள்

உலகின், பெரும்பாலான நாடுகளின் அரசியல் திட்டங்களிலும் சட்டங்களிலும் நீண்டகாலமாக அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கும் சொந்த சிவில் அரசியல் உரிமைகளை மூன்றும் பிரிவு தொடக்கம் 21 ம் பிரிவு வரை விளக்குகின்றன. "ஒவ்வொருவரும் தமது உயிரையும், சுதந்திரத்தையும், சரீரத்தையும் பாதுகாக்க உரிமையுடையவராவர்" என்று 3 ம் பிரிவு கூறுகின்றது. சொந்த உரிமைகளில் மிகவும் மூலாதாரமானது என்று இதனைக் கூறலாம்.

"எவரையேனும் அடிமையாகவோ அடிமைத் தனத்திலோ வைத்திருக்கவொண்ணாது" (பிரிவு 4), "எவருக்கேனும் சித்திரவதையோ கொடிய தண்டனையோ அல்லது மனிதத் தன்மைக்கொவ்வாத தண்டனையோ அல்லது மதிப்புக்குறைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமமோ தண்டனேயோ விதிக்க வொண்ணுது (பிரிவு 5) என இதன் பின்வரும் பிரிவுகளுடன் இதற்கு நெருங்கிய தொடர்புண்டு. " எந்த விதமான அடிமைத்தனமோ தொழும்போ மனித சுதந்திரத்துக்கு முற்றிலும் விரோதமான தென்பது வெளிப்படை. ஒருவரின் மனதை அல்லது சரீரத்தை மனிதத் தன்மைக்கொவ்வாத அல்லது மதிப்புக் குறைக்கும் விதமாக நடத்துவது, அவரின் உயர்வையும் தகுதியையும் அழித்து அவர் பிறவியெடுத்ததன் மூலகாரணத்தையே இழிவு படுத்துகிற தென்பதும் தெளிவாகின்றது."

இன்றைய அரசாங்கத்தில், சட்ட மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இதனைக் குறிப்பிடுதற்கென, சட்ட முன்னிலையில் யாவரும் சமம் (பிரிவு 6) என்றும் சட்டத்தின் மூலம் பாதுகாப்புப் பெற அவர்கள் எல்லோரும் ஏற்றத் தாழ்வின்றி உரிமையுடையவர்களாவர்" (பிரிவு 7) என்றும் "அவரது மூலாதார உரிமைகளைச் சிதைத்துப் பங்கப்படுத்தப்படுமிடத்து அதற்கெதிராக முறையிட்டுத் தக்க பரிகாரம் பெறுவதற்கு அவருக்கு உரிமையுண்டு" (பிரிவு 8) என்றும் இப்பிரகடனம் கூறுகின்றது.

இப்பிரகடனம் ஒரு சர்வதேச பெரும் பிரகடனமாகும். கதிரவன் நல்லாரைப் போலவே தீயார் மீதும் தன் ஒளியைப் பரப்புவதுபோல நிரபராதியின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எவ்வித சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறதோ அதிற் சிறிதளவேனும் குறையாமல் குற்றம் புரிந்தவனின் உரிமைகளையும் பிரகடனம் பாதுகாக்கின்றது".

யதேச்சாதிகாரமாக சிறைப்படுத்தல், காவலில் வைத்தல் அல்லது தேசப் பிரஷ்டம் செய்தல் என்னும் கருமங்களுக்கு எவரையும் உட்படுத்தவொண்ணுது. (பிரிவு 9) என்றும்,

நீதியான முறையில், பகிரங்கமாக விசாரணை செய்யப்படுதற்கு எல்லோருக்கும் உரிமை உண்டு (பிரிவு 10) என்றும்,

குற்றவாளி என்று நிரூபிக்கப்படும்வரை சுற்றவாளியே என்று மதிக்கப்பட எல்லோருக்கும் உரிமை உண்டு (பிரிவு 11) என்றும்,

ஒரு குற்றம் புரியப்பட்ட காலத்தில் அது தண்டனைக்குள்ளாக்கும் குற்றம் என அமையாவிட்டால் எவரையும் குற்றவாளியாக்க வொண்ணுது (பிரிவு 11) என்றும் பிரகடனம் கூறுகின்றது. நிரபராதியையும் "குற்றவாளியையும் ஒன்று போல பாதுகாப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட குற்றச் சட்டத்தினதும் நடவடிக்கைகளினதும் அடிப்படைக்கொள்கைகள்தாம் சேவை. ஏனெனில், குற்றவாளியின் உரிமைகள் பாதுகாக்கப்படாவிட்டால், ஈற்றில் நிரபாராதியின் உரிமைகளுக்கும் பங்கமேற்படும்.

மனிதன் சமூகத்துடன் இணைந்து வாழ்பவன். ஆனுல் அவனது வாழ்வில் தனக்கே சொந்தமான ஒரு பகுதியும் இருக்கின்றது. ஒருவனின் இல்லம் எவராலும் மீறமுடியாத ஒரு ஒதுக்கிடமாக இருத்தல் வேண்டும். தனிப்பட்ட முறையில் ஒருவர் இன்னெருவருக்கு எழுதும் கடிதம் இரகசியமாகவே இருத்தல் வேண்டும். ஆகவே, 12 ம் பிரிவிலுள்ள பிரகடனம் இல்லத்தின் புனிதத் தன்மையையும், கடிதப் போக்குவரத்தின், அந்தரங்கத் தன்மையையும் பாதுகாப்பதோடு ஒருவரின் கௌரவத்தையும் நன்மதிப்பையும் நற்பெயரையும் கூட பாதுகாக்கின்றது.

"தமக்குரிய நாட்டின் எல்லைக்குள் சஞ்சாரஞ் செய்யவும் குடியாக இருக்கவும் ஒவ்வொருவரும் உரிமையுடையவராவர்". மேலும் சுதந்திரமாகச் சஞ்சாரம் செய்யும் உரிமை ஒவ்வொரு நாட்டின் எல்லைக்கப்பாலும் விரிகின்றது. ஒருவர் தம் சொந்த நாடு உட்பட எந்த நாட்டை விட்டகலவும், தம் நாட்டிற்கு மீண்டுபோகவும் உரிமையுடையராவர்".

சரித்திர ஏடுகளில் எங்கணும், கொடுங்கோலனுல் அல்லது சர்வாதிகாரியினுல் ஆண் பெண் இருபாலாரும் துன்புறுத்தப்பட்டு தம் சொந்த நாடுகளை விட்டகன்று பிறநாடுகளில் அடைக்கலம் புகுந்திருக்கின்றுர்கள். "துன்புறுத்தல்களுக்குத் தப்பி வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்து வாழ ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு" என்று, 14 ம் பிரிவு கூறுகின்றது.

அடைக்கலம் பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்று கூறும் விதத்தில் இப்பிரிவு விரிவடையவில்லை. ஒருவருக்கு அடைக்கலம் அளிப்பது ஒரு நாட்டின் பூரண உரிமை என்று கருதப்படுவதே இதற்குக் காரணம். நாடற்றவர்களின் பிரச்சினை சமீபகாலத்தில் மிகப் பாரதூரமான ஒன்ருகியது. சர்வதேச சட்ட அமைப்பில் அது ஒரு முரண்பாடாகும். நாடற்ற ஒருவர் எந்த ஒரு நாட்டின் பாதுகாப்பையும் பெறுவதில்லை. மேலும் அவர் தாம் வதியும் நாட்டில் பல உரிமைகளையும் அநுகூலங்களையும் அடிக்கடி அநுபவிக்க முடியாதிருக்கிறது. ஒரு சாகியத்தைச் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கும் உரிமையுண்டு என 15 ம் பிரிவு கூறுகின்றது. ஏற்கெனவே ஒரு சாகியத்தைச் சேர்ந்தவர்களின் உரிமையை யதேச்சாதிகாரமாகப் பறித்து விடவோ அவர்களின் விருப்பப்படி தங்கள் சாகியத்தை மாற்றிக்கொள்ளும் உரிமையை மறுக்கவோ முடியாது.

**குடும்பப் பாதுகாப்பு**

சமுதாயத்தின் இயற்கையோடொத்த மூலாதாரமான கூட்டுத் தொகுதி குடும்பமேயாதலின், அது சமுதாயத்தாலும் அரசாங்கத்தாலும் பாதுகாக்கப் படுதற்கு உரிமை உடையதாகும் என 16 ம் பிரிவு கூறுகின்றது. "ஆண்களும் பெண்களும் இனம், நாடு, சமயம் முதலிய எத்தகைய கட்டுப்பாடுமின்றி, மணஞ்செய்து குடும்பம் நடாத்த உரிமையுடையவர்களாவர். சதிபதிகளுக்கிடையில் விவாகத்தின் போதும் விவாகத் தொடர்பு நீக்கப்பட்ட பின்பும் சமத்துவமான உரிமைகள் உண்டு". விவாகம் செய்யப்போகும் சதிபதிகளின் "சுதந்திரமானதும் பரிபூரணமானதுமான சம்மதத்துடனேயே விவாகத் தொடர்பு ஏற்படவேண்டும்".

சொத்துக்களைச் சொந்தமாக வைத்திருக்கும் உரிமை தற்கால சமுதாயத்தில் தர்க்கத்துக்குரிய விஷயமாக இருக்கின்றது. 17 ம் பிரிவு மிகவும் பொதுப்படையாகக் கூறிய போதிலும் அவ்வுரிமையைத் தெளிவாக அங்கீகரிக்கின்றது. "தனியாகவும் மற்றவர்களுடன் சேர்ந்தும் சொத்துக்களைச் சொந்தமாக வைத்திருக்க எவரும் உரிமையுடையவராவர். எவருடைய சொத்தையும் யதேச்சாதிகாரமாகப் பறித்தல் ஆகாது".

"தான் விரும்பியபடி நினைக்கவும், தன் மனச்சாட்சிப்படி நடக்கவும், தான் விரும்பும் சமயத்தை அநுஷ்டிக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு" என 18 ம் பிரிவு கூறுகின்றது. இவ்வுரிமை இயல்பாகவே பூரணத்துவம் வாய்ந்ததும், புனிதமானதும், மீறமுடியாததுமாகும். தனிப்பட்ட ஒருவனின் ஆத்மீக உலகில் எந்தக் கொடுங்கோலனும் ஆக்கிரமிப்பு நடத்த முடியாது. தனது சமயத்தை மாற்றிக் கொள்ளுதற்கும் அதனைப் போதித்தும் பயின்றும் வழிபட்டும் அனுட்டித்தும் வெளிப்படுத்துவதற்குள்ள சுதந்திரமும் இவ்வுரிமையில் அடங்குமென இப்பிரிவு மேலும் கூறுகின்றது.

"ஒவ்வொருவருக்கும் சிந்தனை வெளியிறுத்தற் சுதந்திரம் உண்டென 19 ம் பிரிவு கூறுகின்றது. இவ்வுரிமையின் கருத்தையும் வியாபகத்தையும் இப்பிரிவு மேலும் சுட்டிக்காட்டுகின்றது. "மற்றவர்களின் தலையீடின்றி விரும்பிய அபிப்பிராயங்கள் கொள்ளவும் தேச எல்லைகளைப் பொருட்படுத்தாது எவ்வழி மூலமேனும் தகவல்களையும் கருத்துக்களையும் நடாத்தவும் ஏற்கவும் தெரிவிக்கவும் உள்ள சுதந்திரம்" மேலே கூறிய உரிமையில் அடங்கும். "செய்திச் சுதந்திரம் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தால் புனிதமானவை எனக் கருதப்படும் எல்லாச் சுதந்திரங்களிலும் இதுவே தலையாயது" என (59 (1) தீர்மானம்) பொதுச் சபை தீர்மானித்திருக்கிறது.

"சமாதான முறையில் சுதந்திரமாகக் கூட்டம் கூட்டவும் சங்கம் சேரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு" என இருபதாம் பிரிவு கூறுகின்றது. ஒவ்வொருவரும் தனிமனிதனாக இயங்கவோ, தனி மனிதனாக இயங்க நிர்ப்பந்திக்கப்பட்டாலோ சிவில் சமுதாயம் செயல்பட முடியாது. "எந்த ஒரு சங்கத்திலும் சேரும்படி எவரையும் நிர்ப்பந்திக்கலாகாது" என அப்பிரிவு மேலும் கூறுகின்றது. சங்கம் என்ற பதம் ஒரு சமயப் பிரிவு, ஒரு அரசியல் கட்சி, அல்லது ஒரு தொழிற்சங்கம் போன்ற எந்த சங்கத்தையும் குறிப்பதாகும்.

"மக்களின் சித்தமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக இருத்தல் வேண்டும்" என 21 ம் பிரிவு கூறுகின்றது. தங்கள் அரசாங்கத்தைத் தெரிவு செய்து கொள்வதற்கு ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் உரிமையுண்டு. இந்த அபிப்பிராயம் ஏற்றத் தாழ்வில்லாத சர்வஜன வாக்குரிமை முறையைக் கொண்டு இரகசிய வாக்குச் சம்மதச் சீட்டு இடும் ஒழுங்கினால் அல்லது அதற்குச் சமானமான சுயாதீன வாக்களிக்கும் ஒழுங்கினால் காலந்தோறும் நேர்மையான தேர்தல்கள் மூலமாக வெளிக்காட்டப்படல் வேண்டும்" என்றும் தன்து நாட்டின் அரசாங்கத்தில் பங்குகொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டென்றும், தன் நாட்டின் பொதுச் சேவையில் சமமாக ஈடுபட ஒவ்வொருவருக்கும உரிமை உண்டென்றும் அப்பிரிவு கூறுகின்றது.

**பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் :**

"சிவில் அரசியல் சுதந்திரங்களையும் பொருளாதார சமூக கலாசார உரிமைகளையும் அனுபவித்தல் பரஸ்பர சம்பந்தமுள்ளவைகள் என்றும்,—பொருளாதார சமூக கலாசார உரிமைகள் மறுக்கப்படுமிடத்து—மனிதன் சுதந்திரத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறுன் என்றும், ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கருதுகிறது. ஓரளவுக்கு பொருளாதார சமூக பாதுகாப்பும் ஆகக் குறைந்த அளவு கல்வி, கலாசார மெருகும் இல்லாமல் மனிதன் தன் உயர்வையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட முடியாது. மக்கள் அனைவருக்கும் உரித்தான அத்தியாவசிய பொருளாதார சமூக கலாசார உரிமைகளை 22 ம் பிரிவு தொடக்கம் 27 ம் பிரிவு வரை பிரகடனம் விளக்குகின்றது.

22 ம் பிரிவு ஒரு பொதுவான பிரிவாகும். "சமுதாயத்தின் அங்கத்தவர் என்ற முறையில், ஒவ்வொருவரும் சமுதாய நலனிற்கு உரிமையுடையவராவர். மேலும் அவர் "தமது கண்ணியத்துக்கும் தமது தனித்தன்மையின் சுயாதீனமான வளர்ச்சிக்கும் இன்றியமையாதனவைகளான" பொருளாதார சமூக கலாசார உரிமைகளைப் பெறவும் பாத்தியதையுடையவராவர் என்று அது கூறுகின்றது. இந்த உரிமைகளை அவ்வந்நாட்டின் அரசியலமைப்புக்கும் வளத்துக்கும் இயைய நாட்டு முயற்சியின் மூலமும் சருவதேச ஒத்துழைப்பின் மூலமும், ஒவ்வொரு நாட்டினதும் ஸ்தாபன அமைப்பு வழிவகைகள் ஆதியனவற்றிற் கிணங்கவும் பெற்றுக்கொள்ளலாம். 23 ம், 24 ம், 25 ம் பிரிவுகள் பொருளாதார சமூக உரிமைகளை விளக்குகின்றன "தொழில் செய்ய ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு" என 23 ம் பிரிவு கூறுகின்றது. இந்த உரிமையை ஒப்புக்கொண்டமை இக்கால சமுதாயச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விருத்தியாகும். தொழில் செய்யும் உரிமையை வளர்த்தல் அல்லது உறுதிப்படுத்தல் இப்பொழுது அரசாங்கத்தின் பொறுப்பாகியுள்ளது.

"தனக்கு விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுத்தலும் நியாயமும் அநுகூலமுமான தொழில் நிலைமைகளைப் பெறவும் உள்ள உரிமை தொழில், செய்தற்குள்ள உரிமையோடு இணைந்த ஓர் அத்தியாவசிய அம்சமாகும். தன் விருப்பத்திற்கெதிராக அல்லது ஓர் அடிமையாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுபவன் ஒருவனுக்கு தொழில் செய்ய உள்ள உரிமை அர்த்தமற்றதாகிவிடுகின்றது.

ஒத்த வேலைக்கு ஒத்த ஊதியத்தை வேறுபாடின்றிப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என 23 ம் பிரிவு கூறுகின்றது. தன் நலன்களைப் பாதுகாக்க தொழிற்சங்கங்களை அமைக்கவும் அவற்றிற் சேரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என கடைசியாக அப்பிரிவு கூறுகின்றது.

நேர்மையான முறையில் கட்டுப்படுத்தப்பட்ட வேலை நேரம் ஊதியத்துடன் சேர்ந்த பருவ முறை ஆகியவை உட்பட ஆறுதலும் ஓய்வும் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

சமூக பாதுகாப்பு சமூக உதவி ஆகியன முழுவதையும் 25 ம் பிரிவு தன்னகத்தே அடக்குகின்றது. ஒவ்வொருவருக்கும் தாமும் தமது குடும்பமும் ஆரோக்கியத்துடன் நல்வாழ்வு வாழ்வதற்கேற்ற உணவு, உடை, உறையுள், மருத்துவ ஆதரவு, தேவையான சமூகச் சேவைகள் ஆகியவை உட்பட வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கும் வேலையின்மை, நோய், தள்ளாமை, கைம்மை, முதுமை, தன் இயல்பு கடந்த காரணங்களாலாய வாழவழியின்மை ஆகியவை ஏற்படும்போது பாதுகாப்புப் பெறுவதற்கும் உள்ள உரிமையை இப்பிரிவு அங்கீகரிக்கின்றது. தாய்மாரும் குழந்தைகளும் சிறப்பான கவனத்துக்கு உரியவராவர். கல்வி, கலாசார உரிமைகள் 26 ம், 27 ம் பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன. கல்விகற்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என 26 ம் பிரிவு கூறுகின்றது. இவ்வுரிமை அகில உலகிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தங்களுடைய குழந்தைகளுக்கு எவ்விதமான கல்வி அளிக்கப்படல் வேண்டும் என்பதை முடிவாக்கப் பெற்றோர்களுக்கேயுள்ள உரிமை மதிக்கப்படல் வேண்டுமெனினும், சகல பிரசைகளுக்கும் கல்வி வசதியளித்தல் அரசாங்கத்தின் பொறுப்பு எனக் கருதப்படுகிறது.

இப்பிரிவு கல்வியின் பல கட்டங்களைப் பற்றியும் கல்வி வகைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. ஆரம்பக் கல்வி இலவசமானதாயும் கட்டாயமானதாயும் இருத்தல் வேண்டும். தொழின் முறைக் கல்வியும் வேலைத்துறைக் கல்வியும் பொதுவாக யாவருக்கும் கிடைக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும். உயர்தரக் கல்வியும், திறமையை அடிப்படையாகக் கொண்டு எல்லோராலுஞ் சமமாகப் பெறக்கூடியதாய் இருத்தல் வேண்டும். கல்வியின் நோக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அதில் காணப்படும் கருத்து அதிக பெறுமதி யுள்ளதாகும். மனிதனின் தனித் தன்மையைப் பரிபூரணமாக வளர்க்கவும், மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் கூடிய வழிகளில் கல்வி ஊக்கப் படல் வேண்டும். நாடுகளுள்ளும், இனங்கள், மதங் கள் ஆகியவற்றுள்ளும் நல்விளக்கம், சகிப்புத் தன்மை, நட்பு ஆகியவற்றை வளர்ப்பதோடு சமா தானத்தை நிலைநாட்டுவதில் ஐக்கியநாடுகளின் பணிகளுக்கு அது உதவியாயிருத்தலும் வேண் டும்.

27 ம் பிரிவின் கீழ், சமூகத்தின் பண்பாட்டு வாழ்க்கையிற் சுதந்திரமாகப் பங்குபற்றவும், நுண் கலைகளைச் சுவைக்கவும், விஞ்ஞான முன்னேற்றத் திலும் அதன் பயன்களிலும் பங்குபற்றவும் ஒவ் வொருவருக்கும் உரிமையுண்டு. கலைகள், விஞ்ஞா னம் முதலியன உட்பட கலாசாரம், ஒரு சிலருக்கு மட்டுமல்லாது எல்லோருக்கும் உரிமையானவை.

**முடிவான பிரிவுகள்**

கொடுங்கோலாட்சி நிலவும் ஒரு நாட்டில் அல்லது யுத்தத்தில் மூழ்கிக் கிடக்கும் அல்லது கொந்தழிப்பு ஏற்பட்டிருக்கும் ஓர் உலகில் இப்பிரகடனத்தில் குறிப் பிடப்பட்டுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் அநுபவிக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமைகளில் மனித உரிமைகள் ஒன்றில் தற்காலிகமாகக் கைவிடப் படுகின்றன அல்லது அசட்டை செய்யப்படுகின்றன. உயிரே அதன் பெறுமதியை இழந்துவிடுகிறது. சட்ட விதிகளின்படியும் பரஸ்பர நன்மதிப்புக் கொள்கை யின்படியும் ஆட்சி நடாத்தப்படும் சமூக சர்வ தேச அமைப்பில் மட்டுமே மனித உரிமைகளைப் பூரண மாக அனுட்டிக்க முடியும். 28 ம் பிரிவின்படி இப்படிப்பட்ட ஒரு சமூக சர்வதேச அமைப்பைப் பெறுதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

ஒவ்வொரு உரிமைக்கும் ஒரு கடமையுண்டு. இப் பிரகடனம் உரிமைகளையும் சுதந்திரங்களையும் எடுத் துக் கூறும் ஒரு சாசனமாக இருக்கும் அதே நேரத் தில் ஒருவரின் தனித்தன்மை கட்டுப்பாடற்ற பூரண வளர்ச்சி பெறுதற்கு ஏதுவாயுள்ள சமுதாயத்துக்கு ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய கடமைகளை 29 ம் பிரிவு நினைவுறுத்துகின்றது. தம் உரிமைகளையுஞ் சுதந்திரங்களையும் அனுபவிக்கையில், மற்றை யோருடைய உரிமைகளையுஞ் சுதந்திரங்களையும் ஏற்று உரிய மதிப்பளிப்பதற்கும், சனநாயக சமூ கத்தின் அறம், பொதுவொழுங்கு, பொதுநலன் ஆகியவற்றுக்கான நேர்மையான தேவைகளை நிறை வேற்றுதற்கும் அவசியமானவை யென்று சட்ட பூர்வமாகத் தீர்மானிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கே ஒவ்வொருவரும் ஆட்படுத்தப்படலாம். கொள்கை களுக்கும் மாறாக எவரும் தமது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கலாகாது. இப்பிரகட னத்தில் எடுத்தோதப்பட்டவை எவையேனும் இங்கு கூறிய உரிமைகள், சுதந்திரங்கள் ஆகியவற்றில் எதனையேனும் அழிக்கும் நோக்கத்துடன் எக்கரு மத்தையேனும் ஆற்றவோ எவ்வியக்கத்திலேனும் ஈடுபடவோ எவ்வரசுக்கேனும் எக்கூட்டத்துக்கேனும் எம்மனிதனுக்கேனும் எவ்வித உரிமையையும் அளிப் பதாக விளக்கஞ் செய்தலாகாது என ஈற்றில் 80 ம் பிரிவு எச்சரிக்கின்றது.

**ஒழுக்க அல்லது சட்ட அதிகாரம்**

சர்வதேச மகாசாசனம் அல்லது மனித உரிமை கள் பற்றியது -சர்வதேச சாசனம் என இப்பிரகட னம் வர்ணிக்கப்பட்டுள்ளது. அநாகரிக வாழ்க்கையி லிருந்து சுதந்திர ஆட்சியை அடையும் வரை மனி தன் செல்லவேண்டியிருந்த கரடுமுரடான பாதை யில் இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டமாகும்.

மனிதனின் உரிமைகள் பற்றிய பல்வேறு பிர கடனங்களுள் சர்வதேச பிரகடனமே நிச்சயமாக மிகவும் வியாபகமானதாகும். எல்லா இடங்களிலு முள்ள ஆண்களும் பெண்களும் அநுபவிக்கப் பாத் தியதையுடைய உரிமைகளையும் சுதந்திரங்களையும் சரித்திரத்திலேயே முதன் முறையாக எடுத்துக் கூறுவது இதுவேயாகும். இப்பிரகடனம் பாரிஸ் நகரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போது, ஐ. நா. பொதுச் சபைத் தலைவர் ஹேபர்ட் வெரே வைட் (அவுஸ்திரேலியா) கூறியதாவது: "மனித உரிமை கள் மூலாதார சுதந்திரங்கள் பற்றிய ஒரு பிர கடனத்தை சர்வ நாடுகளின் ஸ்தாபன மொன்று வெளியிட்டது இதுவே முதல் தடவையாகும். ஐக் கிய நாடுகளின் ஏகமனதான அபிப்பிராய ஒற் றுமை இதற்குண்டு. பாரிஸிலிருந்தும் நியூயோக்கி லிருந்தும் பல மைகல்களுக்கப்பால் உலகின் எல் லாப்பாகங்களிலுமுள்ள இலட்சக்கணக்கான ஆண், பெண், குழந்தைகள் இப்பிரகடனத்தின் உதவியை யும் வழிகாட்டலையும் ஊக்கமூட்டலையும் நாடி நிற்பார்கள்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதர்களின் அந்தஸ்தை உயர்த்துதற்கு ஐக்கிய நாடுகளின் பணி

சாசனத்தின் பிரகாரம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிநிகர் சமானமான உரிமைகளை ஈட்டிக் கொடுப்பது ஐக்கிய நாடுகளினது நோக்கங்களில் ஒன்ருகும். இந்நோக்கத்தை எய்துவதற்காகப் பொருளாதார, சமூக மன்றமானது அதன் செயலாற்றும் கொமிஷன்களில் ஒன்ருக மாதர்களின் அந்தஸ்துபற்றிய கொமிஷனென்றை 1946 ஆம் ஆண்டில் தாபித்து அதனிடம், சுதந்திரமடையாத நாடுகள் உட்பட உலகம் பூராகவுமுள்ள மாதர்களின் அரசியல், பொருளாதார, சமூக, குடியியல், கல்வி அந்தஸ்துகளைப் பரிசீலனை செய்யும் பொறுப்பையும் மாதர்களின் அந்தஸ்தை உயர்த்தும் வழிவகைகளை மன்றத்துக்குச் சிபாரிசு செய்யும் பொறுப்பையும் அளித்தது. இருபத்தொரு உறுப்பினர்களைக் கொண்ட கொமிஷன் (1962 லிருந்து) ஆண்டு தோறும் கூடி, பொருளாதார, சமூக மன்றத்துக்கு அறிக்கைகள் சமர்ப்பித்து வருகிறது.

### அரசியல் உரிமைகள்

அரசியல் உரிமைகள் ஜீவநாடியாக விளங்குவதன் காரணமாக, தனது வேலைத்திட்டத்தில் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது, இக்கொமிஷன். இதன் வேண்டுகோளின் பிரகாரம் ஆண்களைப்போலப் பெண்களுக்கும் சரிநிகர் சமானமான அரசியல் உரிமைகளை சகல அங்கத்துவ நாடுகளும் வழங்கவேண்டுமென்று 1946 ல் நடைபெற்ற பொதுச்சபை சிபாரிசு செய்தது. அன்றுமுதல், ஒவ்வொரு வருடமும் தேசீய சட்டங்களின்கீழ், மாதர்களின் அரசியல் அந்தஸ்தை மீளவாய்ந்து சரிநிகர் சமான நிலையிலேற்பட்ட முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்திருக்கிறது, கொமிஷன். வாக்களிக்கும் உரிமையையும் பொது அலுவலகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையையும் மாதர்களுக்கு வழங்கியிருக்கின்றன, தொண்ணூற்றிரண்டு நாடுகள். இவற்றில் அறுபத்திரண்டு நாடுகள், ஐக்கிய நாடுகள் தனது பணியை ஆரம்பித்ததிலிருந்து நடவடிக்கையெடுத்திருக்கின்றன. பெண்களுக்கு வாக்குரிமையில்லாத அல்லது வாக்குரிமை தொடர்பாக ஆண்களுக்குத் தேவைப்படாத தகைமைகளைப் பெண்களிடம் வேண்டும் சில நாடுகள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன.

மாதர்களுக்கு அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச உடன்படிக்கையொன்று கொமிஷனல் தயாரிக்கப்பட்டு பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு 1953 ல் கையொப்பத்துக்குத் திறந்துவிடப்பட்டது. பெண்களுக்கு ஆண்களைப்போல சரிநிகர்சமானமாக சகல பொதுத் தேர்தல்களிலும் வாக்களிக்க அருகதையும் பிரசித்தமாகத் தெரிவு செய்யப்பட்ட சபைகளுக்குத் தெரிவுசெய்யப்படுதற்குத் தகுதியும் பொதுப்பதவிகள் வகிப்பதற்கும் பொது நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் பங்குபற்றுவதற்குமான உரிமையும் அளிக்கப்படுதற்கு வசதியளிக்கிறது, இந்த உடன்படிக்கை. நாற்பத்திரண்டு நாடுகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. முப்பத்திஆறு நாடுகள் இதனை ஊர்ஜிதஞ்செய்தோ அல்லது இதற்கு உடன்பட்டோ உள்ளன. ஆனல் அரசியல் உரிமைகளை விவேகமாகவும் பயனுள்ள வகையிலும் உபயோகிக்கும் திறனில்லாவிடத்து அவைகள் பயனற்றவையே. மாதர்களின் அரசியல், குடியியல் கல்வியை, குறிப்பாக மாதர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லாத அல்லது அவற்றை அவர்கள் அண்மையிலேயே பெற்ற நாடுகளில், கொமிஷன் பரிசீலனை செய்துள்ளது.

### கல்வி

மாதர்களுக்கான பொதுக்கல்வியில் கொமிஷன் ஆரம்பத்திலிருந்தே சிரத்தை காட்டியுள்ளதோடு அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்களையும் பரிசீலனை செய்துள்ளது. சகல நாடுகளிலுள்ள மாதர்களுக்கு முதனிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி ஆகியவற்றை அளிப்பதற்கு ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாச்சாரத் தாபனத்தின் துணையுடன் பணியாற்றியும் உள்ளது இது. மாதர்களுக்கான இலவச, கட்டாய முதனிலைக்கல்வியைப் பரப்புதல், மாதர்களிடையே கல்வியறிவையும் முதியோர் கல்வியையும் அதிகரித்தல் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதும் இக்கொமிஷனின் விசேட சிரத்தையாகக் காணப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு இலகுவான தொழில்களிலொன்றுன ஆசிரியத் தொழிலில் அவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களேயும், இத்தொழிலில் ஈடுபட்டிருந்த ஆண்களுக்குக் கிடைத்த சம்பளங்களும் பயிற்சி, தொழில் கிடைத்தல், முன்னேற்றம் ஆகியவற்றுக் கான் வாய்ப்புக்களும் எப்பொழுதும் ஒரேமாதிரி யில்லாதிருந்த போதிலுங்கூட, பரிசீலனே செய்யப் பட்டது.

### பொருளாதார உரிமைகள்

சரிசமமான வேலைக்கு சரிசமமான ஊதியம் அளிக்கப்படவேண்டுமென்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு அது நடைமுறையில் கடைப் பிடிக்கப்படுவதில் வெற்றி காண்பதற்காக சர்வதேச தொழில் தாபனத்தின் துணேயுடன் அரும்பாடுபட் டது, கொமிஷன். பால் அடிப்படையிலன்றி உழைப் பின் அடிப்படையிலேயே ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்பது உட்பட ஆதாரமானதென அது கருதிய கோட்பாடுகள் சிலவற்றை அங்கீகரிக்குமாறு அதன் மூன்றுவது மாநாட்டிலிருந்தே சர்வதேச தொழில் தாபனத்தைக் கொமிஷன் கேட்டுக்கொண் டது. 1951 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட சரிசமமான வேலைக்கு ஆண்களுக்கும் பெண் களுக்கும் சரிசமமான ஊதியம் வழங்குதல் சம்பந் தமான சர்வதேச தொழில் தாபனத்தின் உடன் படிக்கையிலும் சிபாரிசிலும் இக்கோட்பாடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. மாதர்களினது பொருளாதார உரிமைகளின் குறிப்பிட்ட அம்சங்களில், விசேடமாக பகுதிநேரவேலே, வயது முதிர்ந்த மாதர்களுக்குத் தொழில் வழங்கல், ஓய்வுபெறும் வயது, இளேப் பாற்றிச் சம்பள உரிமை ஆகியவைகளில் கொமிஷன் விசேட கவனஞ் செலுத்தியும், குடிசைக் கைத் தொழில்களேயும் கைப்பணிகளேயும் குறிப்பாக, இது வரை கைத்தொழிலில் முன்னேற்றமடையாத நாடுக ளில், கொமிஷன் விருத்திசெய்தும் உள்ளது.

தொழிற் கல்வியும் உயர்தொழிற் பயிற்சியும் அளிப்பதிலும் சகலவகையான வேலேகளேப் பழக் குவதற்கான வாய்ப்புக்களேயளிப்பதிலும் கொமிஷன் அக்கறை காட்டியுள்ளது. அவர்களுக்கான உயர் தொழில், தொழில் நுட்பத் துறைகளிலுள்ள தொழில்கள்பற்றியும் பரிசீலனே செய்துள்ளது, இது. கட்டிடக்கலே, பொறியியல்கலே, சட்டக்கலே மற்றும் இதுபோன்ற உயர்தொழில்களில் மாதர்களுக்குள்ள நிலேமைகள் சம்பந்தமாக அறிக்கைகள் தயாரிக்கப் பட்டன. இந்த உயர்தொழில்களில் பூரணமான சமநிலேயை எய்துவதற்கு முன்பு இவைபற்றிய துரபிப்பிராயங்களேயும் பாரம்பரிய கருத்துக்களேயும் களேவதுபற்றியும் கொமிஷன் கவனத்துக்குக் கொண்டு வந்தது.

### குடும்பமும் சொத்துகள்பற்றிய சட்டங்களும்

பல நாடுகளில், ஆண்களுக்குப் போன்று குடும்ப விவகாரங்களில் பெண்களுக்குச் சம உரிமைகள் கிடையா. அனேக நாடுகளில் பெண்கள் மணஞ் செய்தவுடன் தங்கள் சொத்துக்களின் பேரிலுள்ள சுவாதீனத்தை அவர்கள் இழந்துவிடுகிருர்கள். அனேக சட்ட ரீதியான முறைகளின் கீழ், தந்தை இறந்த பின் பிள்ளேகளே வளர்க்கும் உரிமையும் பாதுகாக்கும் உரிமையும் தாய்மார்களுக்குக் கிடையா. அனேக நாடுகளில் தனது கணவனுடையதைத் தவிர்ந்த சட்டமுறையான குடிவாழுரிமை மனேவிக்கு இல்லாமலிருக்கலாம். அனேக சட்ட ரீதியான உரிமைகள் குடிவாழுரிமைச் சட்டத்தை அடிப் படையாகக் கொண்டிருப்பதனுல் அவர்கள் சொல் லொணு அல்லல்களுக்குள்ளாக நேரிடலாம். தேசிய குடும்ப, சொத்துச் சட்டங்களின் கீழ் மாதர்களின் அந்தஸ்தைத் தீவிரமாகப் பரிசீலனே செய்த பின்பு, கொமிஷன், அகில உலக மனித உரிமைப் பிரக் டனத்துக்கு இணங்க கணவனதும் மனேவியினதும் உரிமைகளிலும் கடமைகளிலும் சமமான நிலேயை அளிப்பதை அரசாங்கங்கள் உறுதிப்படுத்த வேண் டுமென்று சிபாரிசு செய்தது. இந்த சிபாரிசோடு மற்றும், சமமான பெற்ருேர் உரிமைகள், கடமை கள் முதலியவற்றுக்கானதும், மணமான ஒரு பெண் தனது கணவனுடையதைத்தவிர்ந்த சட்ட ரீதியான குடிவாழுரிமையையும் தனது கண வனின் அனுமதியில்லாமல் வீட்டுக்கு வெளியே வேலே செய்வதற்கான உரிமையையும் பெறுதற் கானதும் விவாகத்தின்போது வேருனதும் பொது வானதுமான சொத்துக்களில் பெண்களுக்குச் சம உரிமைகளேயும் விவாக நீக்கத்தின்போது சொத் துக்களில் சம்பங்கு உரிமைகளேயும் அளிக்கும் நிய திச்சட்டமுறையான விவாக உடைமை முறைகளுக் கானதுமான குறித்த சிபாரிசுகளேயும் மன்றம் அங் கீகரித்தது.

பெண்களின் மரபு உரிமைகள், விவாக நீக்கம், சட்ட நடவடிக்கையின்பேரில் பிரிதல் ஆகியவை சம்பந்தமாகவும் கொமிஷன் அண்மையில் பரிசீலனே செய்துள்ளதோடு விவாகத்தையும் குடும்பத்தையும் பாதிக்கும் பால்ய விவாகம், புலத்தார மணம், சீதனம், விவாக வயது, சம்மதத்தைக் கேளாது

மணஞ்செய்து வைத்தல், தாரமிழந்ததும் எடுத்துக்கொள்ளுதல் போன்ற சில பண்டைய சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் கூட விரிவாகப் பரிசீலனை செய்துள்ளது.

மணமகன், மணமகளைச்சேர்ந்த இருசாரரினதும் இதயபூர்வமான சம்மதத்தைச் சட்டப்பெறுமதியான திருமணங்களுக்குரிய ஒரு நிபந்தனையாக வகுத்தல். திருமணஞ் செய்வதற்கு குறைந்தபட்ச சட்டரீதியான ஒரு வயதை நிர்ணயித்தல், திருமணத்தைச் சட்டரீதியாகப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்க வசதியளித்தல் போன்றவற்றை வேண்டுவதான சர்வதேச உடன்படிக்கையொன்றையும் சிபாரிசு ஒன்றையும் கொமிஷன் தயாரித்துள்ளது. பொதுச் சபையின் மூன்ருவது கொமிற்றி, 1961 ல், அதன் பதினுருவது கூட்டத்தின்போது இந்த உத்தேச உடன்படிக்கைபற்றியும் சிபாரிசு பற்றியும் விவாதிக்கப்பட்டது. உடன்படிக்கையில் காணப்படும் பாயிரத்திலும் உப உறுப்புரையிலுமுள்ள விடயங்களை மூன்ருவது கொமிற்றி அங்கீகரித்ததோடு உடன்படிக்கையிலும் சிபாரிசிலும் காணப்படும் எஞ்சியுள்ள உறுப்புரைகளை பொதுச்சபையின் பதினேழாவது கூட்டத்தில் பரிசீலனை செய்வதில் முக்கியத்துவம் கொடுப்பதெனவும் முடிவுசெய்தது.

**மணமான பெண்களின் தேசிய தொடர்பு**

சில நாடுகளில் பெண்ணொருத்தி அந்நியனெருவனை மணஞ்செய்யுங்கால் அவனது தேசியத் தொடர்பு தானுகப் பாதிக்கப்படுகின்றது. அதாவது அவளது நாட்டின் பிரஜாவுரிமையை அவள் இழந்துவிடுவதோடு அவள் கணவனது நாட்டின் பிரஜாவுரிமையும் அவளுக்குக் கிடைக்காமற்போகும். சில சமயங்களில் இரண்டு நாடுகளின் பிரஜாவுரிமைகளும் கிடைக்கும். இதன்பயனுக அவள் நாடற்றவளாக மாறுகிருள் ; அல்லது இரு நாட்டின் பிரஜாவுரிமைகளையும் பெறுகிருள். கொமிஷனின் வேண்டுகோளின்பேரில் பொருளாதார, சமூக மன்றம் சிபாரிசு செய்திருந்து மணமான பெண்களின் தேசியத்தொடர்பு சம்பந்தமான உடன்படிக்கையைப் பொதுச்சபை 1956 ல் அங்கீகரித்தது. ஒரு நாட்டுப் பெண் அந்நியனெருவனை மணஞ்செய்யும்போதோ அன்றி மணநீக்கஞ்செய்யும்போதோ அப்பெண்ணின் தேசியத் தொடர்பு எவ்வகையிலும் தானுகப் பாதிக்கப்படக்கூடாது என்பதை உடன்படிக்கையிலுள்ள நாடுகள் ஒப்புக்கொள்ளுகின்றன. அன்னியப் பெண்ணொருத்தி தனது கணவனது நாட்டின் பிரஜாவுரிமையைத் தன்னிச்சையுடன் பெறமுன்வந்தால் அதற்கான வசதிகளையளிப்பதற்கும் அந்நாடுகள் ஒப்புக்கொள்ளுகின்றன.

இந்த உடன்படிக்கை 1958 ஒகஸ்ட் 11 ந் திகதியன்று நடைமுறைக்கு வந்தது. 1962 பெப்ரவரியில் நடந்ததைப்போல இருபத்தைந்து நாடுகள் கைச்சாத்திட்டும் இருபத்தைந்து நாடுகள் ஊர்ஜிதஞ் செய்தும் உள்ளன.

**ஆலோசனைச் சேவைகளும் தொழில்நுட்ப உதவியும்**

1955 ல் தோற்றப்பட்ட மனித உரிமைத்துறையிலுள்ள ஆலோசனைச்சேவை வேலைத்திட்டத்தில் அரசாங்கங்களின் வேண்டுகோளின்பேரில் அளிக்கப்பட்ட இணையுரிமைப் பரிசுகளும் புலமைப் பரிசில்களும் மனித உரிமைகள் சம்பந்தமான ஆய்வகுப்புகளும் அடங்கும். ஆசிய மாதர்களின் குடியியல் பொறுப்புகளும் பொது வாழ்வில் அவர்கள் பங்கும் என்னும் விடயம்பற்றி இந்த வேலைத்திட்டத்தின்கீழ் 1957 ல் தாய்லாந்திலுள்ள பங்கொக்கில் நடைபெற்ற முதலாவது ஆய்வகுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டது. 1959 ல் கொலம்பியாவிலுள்ள பொகொட்டேயில் நடைபெற்ற மற்றெரு ஆய்வகுப்பில் வட அமெரிக்க, தென் அமெரிக்கப் பிராந்தியத்தில் காணப்படும் இதே விடயம்பற்றி எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்ருவது ஆய்வகுப்பு எத்தியோப்பியாவிலுள்ள அடிஸ் அபாபாவில் 1960 ல் நடைபெற்றது. ஆபிரிக்க நாடுகளையும் பிராந்தியங்களையும் சேர்ந்தவர்கள் இதில் பங்குபற்றினுர்கள். குடும்பச் சட்ட விதியில் மாதர்களின் அந்தஸ்து பற்றிய ஆய்வகுப்பொன்று, 1961 ல், ரோமானியாவிலுள்ள புக்காரெஸ்டில் நடைபெற்றது. இதுபற்றி இரண்டாவது ஆய்வகுப்பொன்று யப்பானிலுள்ள டோக்கியோவில் 1962 ல் நடைபெறும். அபிவிருத்தியடையும் நாடுகளிலுள்ள மாதர்களின் முன்னேற்றத்துக்கான ஐக்கிய நாடுகளின் உதவி வேலைத்திட்டங்கள்பற்றிய புதியதொரு பரிசீலனை, மன்றத்தின் வேண்டுகோளின்பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஐ. நா. கா. வெளியீடு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..................



# குழந்தை உரிமைப் பிரகடனம்

ஒவ்வொரு குழந்தையும் புறநடை எதுவுமின்றி அனுபவிக்கவேண்டிய உரிமைகளையும் சுதந்திரங்களையும் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட குழந்தை உரிமைப் பிரகடனமொன்றை 1959 ம் நவம்பர் 20 ந் திகதி யன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஏகமனதாக அங்கீகரித்துப் பிரசித்தம் செய்தது. இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் சர்வதேச சமுதாயம் ஒப்புக் கொண்டுள்ளது.

பிரசித்தஞ்செய்த அனேகமான உரிமைகளும் சுதந்திரங்களும், 1948 ல் பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டன. எனினும் குழந்தையின் விசேட தேவைகளைக் குறித்து ஒரு தனியான பிரகடனம் அமைப்பது அவசியமெனக் கருதப்பட்டது. புதிய பிரகடனத்துக்கான பாயிரத்தில் குழந்தையின் உடலும் உள்ளமும் முதிர்ச்சியடையாத காரணத்தால் அது பிறப்பதற்கு முன்னும் பிறந்த பின்னும் அதற்கு விசேட பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. குழந்தைக்குச் சிறந்தவற்றை நல்குவதற்கு மனிதவர்க்கம் கடமைப்பட்டிருக்கிறது என்பதையும் பாயிரம் உறுதிப்படுத்துகிறது.

அகில உலகப் பிரகடனத்தைப் போன்று அனைவரையும் எய்தும்படி வேண்ட வேண்டியதொரு தரத்தைக் குழந்தை உரிமைப் பிரகடனம் அமைத்திருக்கிறது. குறிப்பிட்டுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் அங்கீகரித்து அவற்றைக் கடைப் பிடிப்பதற்கு முயலுமாறு பெற்றோர்கள், தனிப்பட்டோர் ஆகியோருடன் தன்னிச்சையான தாபனங்கள், உள்ளூர் அதிகார சபைகள், அரசாங்கங்கள் ஆகியனவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சிரத்தையுடன் உருவாக்கப்பட்ட பத்துக் கோட்பாடுகளில், இப்பிரகடனம் குழந்தையின் பின்வரும் உரிமைகளை உறுதிப்படுத்துகிறது. அவையாவன :— விசேட பாதுகாப்பை அனுபவிப்பதற்கும், உகந்ததும் வழக்கமானதுமான நிலையிலும் சுதந்திரமானதும் அந்தஸ்துள்ளதுமான நிலைமைகளிலும் விருத்தி செய்துகொள்வதற்கு அக்குழந்தைக்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் அளிக்கப்படுதற்கும்; அக்குழந்தையின் பிறப்பிலிருந்து ஒரு பெயரையும் தேசியத் தொடர்பையும் கொண்டிருப்பதற்கும்; போதிய அளவு ஊட்டம், இருப்பிடம், பொழுது போக்கு, வைத்திய சேவைகள் உட்பட சமூக பாதுகாப்பின் பயன்களை அனுபவிப்பதற்கும்; குழந்தை இடைஞ்சல் படும் பட்சத்தில் அது விசேட சிகிச்சையும் கல்வியும் பராமரிப்பும் பெறுதற்கும்; அன்பும் பாதுகாப்பும் நிறைந்த சூழலிலும், சாத்தியமானவிடத்து அதன் பெற்றோர்களின் பராமரிப்பிலும் பொறுப்பிலும் வளருவதற்கும்; கல்வி பெறுதற்கும்; ஆபத்துக்காலத்தில் முதன்முதலாக நிவாரணம் பெறுபவர்களில் ஒருவராக இருப்பதற்கும்; சகல வகையான அலட்சியம், கொடுமை, சுரண்டல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கும்; வேற்றுமைகளை வளர்க்கும் எவ்வித செயல்களிலிருந்து பாதுகாக்கப் படுதற்குமானவை. "நல் விளக்கம், சகிப்புத் தன்மை, மக்களிடையே நட்புறவு, சமாதானம், சர்வதேச சகோதரத்துவம் போன்ற நல்லியல்புகளுடன் குழந்தை போன்று வளர்க்கப்பட்டு" மென முடிவில் இப்பிரகடனம் வற்புறுத்துகிறது.

(ஐ. நா. கா. வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தூர் Technical Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



# சுயநிர்ணயத்துக்கு மக்களுக்கு உள்ள உரிமை

மனித உரிமை நகல் உடன்படிக்கையில் சகல மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையுண்டு எனக் கூறப்பட்டுள்ளது. இந்த உரிமையின் பலனுக, மக்கள் தங்கள் அரசியல் அந்தஸ்தை சுதந்திரமாக நிர்ணயிக்கவும், தங்கள் பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தியில் சுதந்திரமாக ஈடுபடவும் இடமுண்டு. பரஸ்பர நன்மை, சர்வதேச சட்டம் என்ற கொள்கை அடிப்படையில் சர்வதேச பொருளாதார கூட்டுறவு காரணமாக எழும் கடமைகளுக்குக் குந்தகம் இல்லாமல், மக்கள் தங்கள் சொந்த நன்மைக்காக, தங்கள் இயற்கைச் செல்வத்தையும் மூலவளங்களையும் கையாளலாம் என இந்த உடன்படிக்கையிலுள்ள பிரிவுகள் கூறுகின்றன. மக்களின் சீவனுேபாயங்கள் எவ்வகையிலும் அபகரிக்கப்படலாகாது. சுய நிர்ணயத்துக்குரிய உரிமையை உணரும்படி சகல நாடுகளும் உதவி செய்வதுடன் அவ்வுரிமையைக் கௌரவிக்கவும் வேண்டும்.

உடன்படிக்கைக்குப் புறம்பாகவும் சுயநிர்ணயம் என்ற பிரச்சினை விவாதிக்கப்பட்டது. 1955 ம் ஆண்டு மனித உரிமைக் கொமிஷன் இரண்டு கொமிஷன்களை பொதுச் சபை நியமிக்கவேண்டுமெனச் சிபார்சு செய்தது. இவ்விரு கொமிஷன்களுக்குப் பின்னர் மூன்ருவது கொமிஷனும் நியமிக்கப்பட்டது. தங்கள் இயற்கைச் செல்வம் மூலவளம் ஆகியவற்றின் மீது மக்களுக்கும் தேசங்களுக்கும் உள்ள நிரந்தர தனியுரிமை அந்தஸ்து பற்றி பூரண பரிசீலனை நடத்தும்படி ஒன்பது அங்கத்தவர் கொண்ட கொமிஷன் ஒன்று 1958 ல் நிறைவேறிய தீர்மானப்படி பொதுச்சபை நியமித்தது. இந்த உரிமையை வலியுறுத்துவதற்கு சிபாரிசுகள் தயாரிக்கும்படி கேட்கப்பட்ட கொமிஷன் 1959, 1960, 1961 ம் ஆண்டுகளில் மூன்றுமுறை கூடியது.

இது அநேக கொள்கைகளை வகுத்தது. அவற்றுட் சில்வருமாறு : இயற்கை வளங்களை ஆராய்தல், விருத்தி செய்தல், கையாளுதல் என்பனவும், தேவையான அந்நிய மூலதனத்தை அனுமதிப்பதும் மக்களால் சுயேச்சையாக விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இசைய இருத்தல் வேண்டும். அந்நிய மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருவாய் தேசீய சட்டம் சர்வதேச சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். சுதந்திரமாக ஏற்றுக்கொண்ட விகிதப்படி இலாபம் பங்கிடப்பட வேண்டும். தேசீயமயமாக்கல், பறிமுதல் செய்தல் அல்லது கையேற்றல் தேசீய பாதுகாப்பு அல்லது உரிமையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய நடவடிக்கை எடுக்கும் நாட்டில் அப்போது அமுலில் இருக்கும் விதிகளுக்கிணங்கவும் சர்வதேசச் சட்டத்துக்கிணங்கவும் சொந்தக்காரனுக்கு தகுந்த நஷ்ட ஈடு அளிக்கப்பட வேண்டும். தங்கள் செல்வத்திலும் மூலவளத்திலும் மக்களுக்கும் தேசங்களுக்கும் உள்ள தனியுரிமையை மீறுதல் ஐக்கியநாடுகளின் சாசனத்துக்கு மாறுனதாகும். மேலும் அது சர்வதேசக் கூட்டுறவு விருத்தியையும் சமாதானம் நிலவுவதையும் தடைசெய்கிறது.

1960 ம் ஆண்டில், பதினைந்தாவது கூட்டத்தில், குடியேற்ற நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்க வேண்டுமென்ற பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல திறத்திலும் காணப்படும் குடியேற்ற நாட்டு ஆதிக்க முறையினை விரைவாகவும் நிபந்தனையின்றியும், ஒழித்துக் கட்டவேண்டுமென்பதன் அவசியத்தை இது வெளிப்படுத்திக் கூறியுள்ளது. அந்நியர் ஆட்சிக்கும் ஆதிக்கத்துக்கும் சரண்டலுக்கும் மக்களை உட்படுத்தல் அடிப்படை மனித உரிமைகளை மறுப்பதாகும் எனவும், ஐக்கிய நாடுகள் சாசனத்துக்கு விரோதமானது எனவும், உலக சமாதானமும் கூட்டுறவும் விருத்தியாவதற்கு முட்டுக்கட்டையாகும் எனவும் பொதுச்சபை வெளிப்படுத்தியது. சுதந்திரம் அளிப்பதைப் பின்போடுவதற்கு மக்களின் அரசியல், பொருளாதார, கல்வித் தராதர நிலைமை இடமளிக்காது என்ற போலி நியாயம், பொருந்தாது. ஓர் அரசாங்கத்தின் பாதுகாப்பிலுள்ள மக்கள் பூரண சுதந்திரம்பெறுவதற்கு தங்களுக்குள்ள உரிமையைச் சமாதானமாகவும் சுயேச்சையாகவும் செலுத்தும் பொருட்டு அவர்களுக்கெதிராக படை முயற்சிகளோ அடக்குமுறைகளோ கையாளுதல் நிறுத்தப்படவேண்டும். தர்மகர்த்தா பரிபாலன முறைக்குட்பட்ட நாடுகளிலும் சுய ஆட்சியற்ற நாடுகளிலும், இதுவரை சுதந்திரம் அடையாத நாடுகளிலும், அந்நாட்டு மக்கள் இன, நிற, கொள்கை வேற்றுமையின்றி பூரண சுதந்திரம் அநுபவிக்கக் கூடியதாக சகல அதிகாரமும் வழங்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சகல அரசுகளும் அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தையும் குடியேற்ற நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குதல் பற்றிய பிரகடனத்தையும் விசுவாசத்துடன் பின்பற்றுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வேலைத்திட்டம்

1948 ம் ஆண்டு டிசம்பர் 10 ம் திகதி செய்யப்பட்ட பிரகடனம் ஒரு சரித்திரச் சுருக்கத்திலும் அதிக முக்யத்துவம் வாய்ந்தது. அது ஒரு வேலைத்திட்டம். அதன் பந்திகள் ஒவ்வொன்றும் முயற்சியை வற்புறுத்துகிறது. அதன் வரிகள் ஒவ்வொன்றும் அசட்டையைக் கண்டிக்கிறது. அதன் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் கடந்த கால சரித்திரத்தின் தனிப்பட்ட அல்லது தேசீயக் குறிப்பு எதையேனும் மறுத்துக் கூறுகின்றது. அதில் காணப்படும் ஒவ்வொரு வார்த்தையும் எமது தற்போதைய நிலைமையை ஊடுருவி ஆராயும்படி எம்மை வற்புறுத்துகின்றது.

மனித சமுதாயத்தின் தலைவிதி நம் எல்லோருக்கும் பொதுவான பிரிக்க முடியாத பொறுப்பாகும். ஒரு தனி மனிதனின் உரிமை ஒன்றையேனும் அஞ்சாமல் புறக்கணிக்கக்கூடியதாக இருக்கும்வரை ஐக்கிய நாடுகளின் பிரகடனம் நம் எல்லோரையும் கோழைகள் என்றும் மந்த புத்தியுள்ளவர்கள் என்றும், சோம்பேறிகளென்றும் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதோடு, மனித தர்மம் இல்லாதவர்ளென்றும் ஞாபகமூட்டிக் கொண்டேயிருக்கும். மனித சமுதாயத்தின் பெரும்பகுதி பட்டினியையும் அநீதியையும் எதிர்நோக்கி வாழ்ந்து, அறியாமையில் மாய்ந்து மடிந்து கொண்டிருக்கும் வரையிலும், பாரிஸ் நகர பிரகடனம் கைக்கெட்டாத இலட்சியமாகவே இருந்து வரும்.

டிசம்பர் 10 ம் திகதியின் பிரகடனத்தை உலகெங்கும் பரப்புவது மனித சமுதாயத்துக்கு இசைந்தது எனச் சொல்லக் கூடிய ஒரு வாழ்க்கைக் கான இயக்கத்தை அதாவது, பிரகடனத்தில் கைச்சாத்திட்ட அரசாங்கங்கள் சங்கற்பஞ் செய்து கொண்ட ஓர் இயக்கத்தை கொண்டு நடத்துவதாகும். இவ்வியக்கம் வெறும் பேச்சளவில் மட்டுமே யல்லாமல் நாகரிகத்துக்கும் மனிதனுக்கும் மனித சமுதாயத்துக்கும் கடமையை ஓரளவுக்கேனும் உணர்ந்ததாக இருத்தல் வேண்டும். கல்வி, விஞ்ஞானம், கலாசாரத்துறைகளில் இக்கடமையை நிறைவேற்றுவதில் அரசாங்கங்களுக்கு உதவி புரிவதே யுனெஸ்கோவின் பெரும் தொண்டாகும். அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் பாதுகாவலர்களாகவும், அதன் வாயிலாக, பிரகடனத்தை தீவிரமாகக் கடைப்பிடித்தொழுகுபவர்களாகவும் சகலரையும் பயிற்றுவிப்பதே யல்லாமல் கலாசாரம், கல்வி, விஞ்ஞானம் ஆகிய துறைகளைக் கொண்டு இதிலும் சிறந்த வேறு எப்பணியை எம்மால் நிறைவேற்ற முடியும் ?

(ஜெயிம் ரொறே போடே)

# மனித உரிமைத்தினம்

அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் பின், யுனெஸ்கோ டிரைக்டர்–ஜெனரல் அவர்கள் டிசம்பர் 10 ம் திகதியை மனித உரிமைத்தினமாக அவதானிக்கும்படி பிரேரித்தார். 1949 பெப்ருவரி 4 ம் திகதி யுனெஸ்கோ அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பிய கடிதத்தில், ஒவ்வொரு வருடமும் சுதந்திரக் கொள்கைகளுக்கும் மனிதனின் உயர்வுக்கும் அஞ்சலி செய்யுமுகமாக சகல பாடசாலைகளிலும் நிகழ்ச்சி நிரலில் ஓர் அங்கமாக டிசம்பர் 10 ந் திகதியை குறித்து வைத்துக் கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

டிசம்பர் 10 ம் திகதியை மனித உரிமைத்தினமாக ஒவ்வொரு வருடமும் அனுட்டிக்கவேண்டுமென்ற தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 1950 ம் ஆண்டு டிசம்பர் 4 ம் திகதி நிறைவேற்றப்பட்டது.

அன்று தொடக்கம், உலகின் பலபாகங்களிலும் டிசம்பர் 10 ம் திகதி மனித உரிமைத் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளுக்கு ஓர் ஆபத்து

ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றிய போது, அரசியலிலும் பொருளாதாரத்திலும் மனிதனின் சாதனை அத்தன்மையதாக இருந்தது.

அவரது ஆட்சியின் கீழ் மனித சமுதாயத்தில், மற்றவர்களை விட தங்களை உயர்ந்தவர்கள் எனக் கூறிக் கொண்ட ஒரு சாராரின் அதிகாரமோகத்தின் எதிரே தனிமனிதனின் சுதந்திரம் அடக்கி ஒடுக்கப்பட்டு ஒழுக்கம், மனித உரிமைகள், சுயமரியாதை ஆதியன சம்பந்தமான சகல பிரச்சினைகளும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன.

மனித உரிமைகள் திட்டமிடப்பட்டு மீறப்பட்டன. சில வருடகாலத்துக்குப்பின், யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்றாகி, சீக்கிரமே அது மூண்டும் விட்டது.

எனவே ஒருநாடு தன் சொந்த வேட்கைக்கு அடிப்படை மனித உரிமைகளை தத்தம் செய்யும் போதெல்லாம் யுத்த அபாயம் கிளம்புகிற தென்பதை நாம் அறிந்து கொண்டோம்.

இவை அனுட்டிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே 1948 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதியன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அகில உலக மனித, உரிமைப்பிரகடனத்தை நிறைவேற்றியது.

# திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகத்தில், அதன் நடுநாயகமாய்த்திகழும் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு பாடலும் "ஏலோரெம்பாவாய்" என முடியும் இருபது பாடல்கள் கொண்டது ; சைவ மரபினர் அனைவர் வீடுகளிலும் ஒவ்வோராண்டிலும் மார்கழி வைகறைப் பொழுதில் ஓதப்பெறுவது ; சீயம் (தாய்லாந்து) போன்ற அயல்நாடுகளிலும் ஓதப்பெறுவதும் திருவிழாக் கொண்டாடப் பெறுவதும் ஆகிய சிறப்புடையது.

சைவ மரபினர்க்குத் திருவெம்பாவை போல வைணவ மரபினர்க்கு ஸ்ரீஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை உரியது. சமண மரபினர்க்கும் "பாவை" நூல் ஒன்று இருந்ததென யாப்பருங்கல விருத்தியுரையால் தெரிகின்றது. இப்பாவை நூல்களில் வரும் சொல்லாட்சி, கருத்தாட்சி ஒப்புமை கொண்டு, வேறுபட்ட மரபினரை ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடே இவை எழுந்தன என்று கருத இடம் ஏற்படுகிறது.

பண்டைக் காலத்தில் மணமாகாத கன்னிப் பெண்கள், "பாவை நோன்பு" என ஒரு நோன்பு நோற்று வந்தனர். அந்த நோன்பிற்கு இந்தப் பாவைப் பாடல்கள் துணையாக இருந்தன. சைவர் மரபில் இந்த நோன்பு மார்கழித் திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கித் திருவாதிரையன்று முடிவுபெறும். ஐந்தாம் வயது முதல் பன்னிரண்டாம் வயது ஈறாக உள்ள கன்னிப் பெண்கள் இந்த நோன்பிற்குரியவர். இவர்கள் ஒருவரை ஒருவர் துயிலுணர்த்த, வைகறைப்பொழுதில் வீடுதோறும் செல்வர். அனைவரும் துயிலுணர்ந்தவுடன் ஒன்று சேர்ந்து நீர்நிலைக்குச் செல்வர் ; அம்மையப்பர் புகழ் பாடிக்கொண்டே நீராடுவர் ; பிறகு இறைவனுடைய சக்தி எனவும், திருவடி எனவும் சாத்திரங்கள் கூறும் இறைவன் திருவருளைக் கௌரி என்ற பெயரிட்டு, நுண்மணலால் அக்கௌரியின் உருவமைத்து வழிபடுவர். இவ்வாறு பத்து நாட்கள் தொடர்ந்து வழிபடும் வழிபாட்டால் தாம் விரும்பும் நற்கணவரைப் பெறுவர் ; உலகுய்ய மழை பெறுவர். திருவெம்பாவை இவ்வளவும் உணர்த்துகிறது.

உள்ளுறையாக மற்றோர் உண்மைக் கருத்தையும் திருவெம்பாவை உணர்த்துகிறது. இறைவன் உயிர்த்தலைவன். சத்திநிபாதம் பெற்ற பக்குவமுள்ள மக்களுயிர்களெல்லாம் கன்னிப் பெண்கள். அவை ஆணவ இருளிற் பிணிப்புண்டிருக்கும் நிலையே உறக்கம். மலத்தின் ஆற்றல் ஒழியப்பெறும் நிலையே துயிலுணர்ந்தெழுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலபரிபாகமுடைய உயிர்களே முன்பாகத் துயிலு ணர்ந்தெழும் கன்னிப் பெண்கள். மலபரிபாகம் எய்தாத உயிர்களை அவர்கள் உணர்த்தி, மலபரி பாகப் படுத்தி எழச்செய்து, அன்புநெறிச் செலுத்தி இறையருளில் தோய்வித்தலே நீராடலும் நோன்பு நோற்றலும் ஆகும். நீராடி நோற்றுப்பெறும் பயன் ஆதிரை நாள் விழாவில் கூத்தப்பிரான் ஆடல் கண்டு களித்தலும், அவனுடைய திருவரு ளின் துணையால் ஆன்ம நாயகனுகிய அவனோடு கலத்தலும் ஆகும். இதுபற்றியே கன்னிப் பெண் களேயன்றி மற்றப் பெண்டிரும் ஆண்களும் திரு வெம்பாவையை ஓதும் நெறியைக் கடைப்பிடிப்பர்.

"சத்தியை வியந்தது" என்பது திருவெம்பா வைக்கு உள்ளுறை பொருளென்று சான்றோர் கூறு வர். கன்னிப் பெண்கள் சத்தியாம் கௌரியை வழிபடுங்கால் அச்சத்தியை வியந்து பாராட்டுதல் பற்றி இவ்வாறு கருத்துரைப்பது பொருத்தமுடைய தேயாகும். ஆனால் இதுகொண்டு மனோன்மணி முதல் வாமை ஈருகக் கூறப்படும் நவசத்திகளும் உலகப் படைப்பின் நிமித்தம் முறையே முன்னது பின்னதைப் பிரேரித்து உணர்த்திய குறிப்பே திரு வெம்பாவையின் முதலெட்டுப் பாடல்களில் உள்ள தெனவும், இச்சத்திகளின் இயக்கத்தால் மாயை காரியப்பட்டுப் பிருதிவி முடிவான பிரபஞ்ச காரியம் நடைபெறுவதையே ஏனைய பாடல்கள் குறிக்கின் றன எனவும் கூறுவர்.

ஆண்டாள் திருப்பாவையில் முப்பது பாடல்கள் இருத்தல் கொண்டு, மார்கழித்திங்கள் முப்பது நாட் களுள் ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு பாடல் ஓதுவதற்குரியதாகக் கூறித் திருவெம்பாவையில் இருபது பாடல்களே இருத்தலால் பத்துப் பாடல்கள் காணுமற் போயின என்பது சிலர் கொள்கை. ஒவ் வொரு பாடலே ஒவ்வொரு நாளுக்கும் ஓதுவதற் குரியதெனின், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன் னிப் பெண்ணே எழுப்பப்பட்டாள் எனல் வேண்டும். முதலெட்டுப் பாடல்கள் போக ஏனைய பாடல்கள் பொருளியைபு பெறுமல் வற்றி நிற்கும். எனவே எல்லாப் பாடல்களும் நாள் தோறும் ஓதுதற்குரி யன என்று ஏற்பதே பொருத்தமுடையதாகும். திருவெம்பாவையின் இறுதிப் பாடலான இருபதாம் பாடல் போற்றியுணர்த்தி முடிவுபெறும் முடிபு கண் டும், இடையில் பத்துப்பாடல்கள் காணுமல் போயின என்று கூறுவது பொருந்தாது.

"ஏலோரெம்பாவாய்" என்பதில் ஏல், ஓர் என் பன அசைகள். எம்பாவாய் என்பது அம்பிகையாம் கௌரியை விளிக்கும் விளி. எனவே, ஏலோ ஏலோரெம்பாவாய்" என்பது இன்னேலியோடு கௌரியை நினைவுபடுத்தும் மந்திரமாகக் கொள் வதே பொருத்தமாகும். இவ்வாறன்றி, "ஏல் —பெண்ணே, நான் கூறுவதை ஏற்றுக்கொள்; ஓர்—ஆராய்ந்துணர்" என, ஏல், ஓர் என்பனவற் றிற்குப் பொருள் கூறுதல், ஒன்பதாம் பாடலி லிருந்து பொருந்தவில்லை.

திருவெம்பாவையில் முதலெட்டுப் பாடல்கள் கன் னிப் பெண்கள் தம்முள் ஒருவரையொருவர் துயி லெழுப்புதலை உணர்த்துவன. ஒன்பதாம் பாடல் தமக்குரிய நற்கணவர் இயல்பு கூறி, அத்தகைய வரைத் தமக்கருளவேண்டும் என்று வேண்டுதலை உணர்த்துவது; 10 ஆம் பாடல், இறைவன் புகழ் அறுதியிட்டுக் கூறுந்தகையது அல்ல என உரைப்பது. 11 ஆம் பாடல், பெண்கள் நீராடத் தொடங்குதலையும், இறைவன் தம்மை உடனிருந்து காக்கவேண்டும் என அவர்கள் வேண்டுதலையும் கூறுவது. 12 ஆம் பாடல், பொய்கையிலேயன்றிச் சுனையிலும் நீராடுதலைக் காட்டுவது. 13 ஆம் பாடல், பொய்கை, அம்மையப்பராய்க் காட்சியளித் தலைக் குறிப்பது. 14 ஆம் பாடல், கௌரி நோன் பிற்கியையச் சோதிதிறம் கூறி, இறுதியில் சத்தியின் சிறந்த கருணைத் திறத்தை இயம்புவது. 15 ஆம் பாடல், இறைவன் அருட் குணங்களில் ஈடுபடுவார்க்கு உண்டாகும் மெய்ப்பாடுகளை உணர்த்தி, அத்தகைய இறையன்பினைத் தாமும் பெற அவன் அருளுவான் என இயம்பிக் கன்னிப் பெண்கள் நீராடுதலைக் கூறுவது. 16 ஆம் பாடல், உலகர் அனைவர்க்கும் பயன்படும் மழை வேண்டுதலை மொழிவது. 17 ஆம் பாடல், தன்னையடைந்து வழிபடும் அன்பர்க்கே யன்றி அன்பர் ஆயினர் அனைவருக்கும் தானே சென்று அருளும் இறைவன் அருளெளிமையை அறிவிப்பது. 18 ஆம் பாடல், சூரியோதயத்தை உவமை நயந்தோன்றக் கூறி, இறைவன் இலக் கணங்களைச் சாத்திரக் கருத்திற்கியைய எடுத்தியம்பு வது. 19 ஆம் பாடல், பெண்கள் தங்கள் கற்பு டைமைக்குரிய உறுதியான கொள்கைகளை எடுத் தோதி, அவற்றைத் தாங்கள் நன்கு கடைப்பிடித் தற்கு அவன் அருள்புரியவேண்டும் என இரப்ப கூறுவது. 20 ஆம் பாடல், ஐந்தொழிலியற்றும் இறைவன் இயல்பை உணர்த்தி, அவன் திருவடி யாம் கௌரி தம்மை ஆட்கொள்ளும் திறம் இயம்பி மார்கழி நீராடலின் முடிவைக் கூறுவது.

சைவசித்தாந்தத் தலைமைச் சாத்திரம் எனப்படும் சிவஞானபோதத்திற்கு ஊற்றுக் களனுய் நிற்பது திருவெம்பாவை எனலாம்.

"கலைக் களஞ்சியம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி

# யாழ்ப்பாணம்

டாக்டர் டபிள்யு. ரேபேட் ஹோமஸ்

(மேனுட்டறிஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தைப்பற்றித் தாம் கொண்ட கருத்தை இக்கட்டுரையில் விளக்குகிருர்)

யாழ்ப்பாண நகரில் எட்டு பள்ளிவாசல்களும், ஒரு பௌத்த ஆலயமும் பன்னிரண்டு கத்தோலிக்க தேவாலயங்களும், எட்டு புரொட்டஸ்தாந்த தேவாலயங்களும் உண்டு. யாதேனும் ஒரு விஷயத்தில் இந்து சமயக் கொள்கை இதுதான் என்று ஏகமனதுடன் அபிப்பிராயம் தெரிவிக்கக் கூடிய பொதுத் தாபனம் இந்து மக்களிடையே இல்லை. யாழ்நகரில் தலை சிறந்த ஆலயங்கள் இரண்டு உண்டு. வண்ணுர் பண்ணையில் உள்ள சிவன் கோயிலும், நல்லூரிலுள்ள கந்தசுவாமி கோயிலுமே பெரிய ஆலயங்களாகும். மிகவும் புராதனப் பெருமை வாய்ந்த கோயில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். இது யாழ்ப்பாணத்து அரசர் ஆட்சிக் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. பழைய கட்டடம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. இப்போதுள்ள கட்டடம் பதினெட்டாம் நூற்ருண்டில் கட்டப் பெற்றது. சிவன் கோயில் டச்சுக்காரர் ஆட்சிக் காலத்திலிருந்த வைத்தியலிங்கச் செட்டியார் எனும் பிரபல்ய வர்த்தகரால் ஸ்தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சிறு கோயில்கள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்துக்கள் பொதுவாக மரக்கறி போசனமே உண்பார்கள். இப்பொழுது சிலர் மாமிச போசனம் உண்கின்றனர். ஆட்டிறைச்சியைச் சிலர் உண்டாலும், பலர் மாட்டிறைச்சியை விரும்புவதில்லை.

## தொழில்கள்

தங்க நகைகள் செய்வது பொற்கொல்லரின் தொழிலாகும். வருடமொன்றுக்கு மூன்று அவுன்ஸ் தங்கம் வாங்கவே ஒரு பொற்கொல்லருக்கு அரசாங்கம் அனுமதிப்பத்திரம் வழங்குகிறது. இது ஒருவருக்கு அரைமாத வேலைக்குத்தான் போதியது. எஞ்சிய கால வேலைக்கு அவுர் வாடிக்கைக்காரர் கொண்டுவந்து கொடுக்கும் தங்கத்தை அல்லது விற்கப்படும் பழைய நகைகளை வாங்கித்தான் உபயோகிக்க வேண்டும். தங்கம் களவாகவும் கொண்டுவரப்படுகிறது.

பதினேழாம் நூற்ருண்டின் முற் கூற்றில் போர்த்துக்கீசர் இலங்கையில் புகையிலைச் செய்கையைத் தொடங்கி வைத்தார்கள். யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கை எங்கும் பரவியுள்ளது. சுருட்டுத் தொழிலும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. சுருட்டுக் கொட்டில்களில் அல்லது அறைகளில் 5 தொடக்கம் 75 பேர் வரை தொழில் புரிகின்றனர். ஒருவர் நாளொன்றுக்கு 500 சுருட்டுவரை சுற்ற முடியும். ஒருவர் ரூபா 4 தொடக்கம் 8 ரூபா வரை சில சமயங்களில் 10 ரூபா வரை உழைக்க முடியும். இலங்கையில் வருடமொன்றுக்கு 250—400,000,000 சுருட்டுகள் உண்டாக்கப்படுகின்றன. மொத்த உற்பத்தியில் ஏழில் ஒரு பங்கு யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கிறது. சிகரட்டுகள் யாழ்ப்பாணத்திற் செய்யப்படுவதில்லை. வறியவர்கள் பீடி குடிக்கிருர்கள். இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படும் இலைகளைக் கொண்டு, மலிவான புகையிலையை உபயோகித்து பீடி செய்யப்படுகிறது. இது சிகரெட்டிலும் பார்க்க மலிவான விலையில் கிடைக்கிறது.

உப்புநீர் தோய்த்துப் பதப்படுத்திய புகையிலை தென்னிந்தியாவிலுள்ள திருவாங்கூருக்கு அனுப்பப்படுகிறது. யாழ்ப்பாணக் கடலேரியிலுள்ள நீரில் நனைத்துப் பதப்படுத்திய இந்தப் புகையிலையை திருவாங்கூரிலுள்ள மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இது முன்ஞெருகாலத்தில் பெரிய வியாபாரமாக நடைபெற்றது. ஆனுல் இப்போது பாரிய ஏற்றுமதி வரியும் கட்டுப்பாடும் இந்த வியாபாரம் முன்ருக நின்றுவிடும் நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டன.

பிறிதொரு முக்கியமான கைத்தொழில் தும்பிலிருந்து கயிறு திரிக்கும் கைத்தொழிலாகும். தென்னமட்டையிலிருந்து தும்பு எடுக்கப்படுகிறது. இதிலிருந்து கயிறு திரிக்கப்படுகிறது. தும்பைக் கொண்டு கால் மிதிப்புகள் செய்யப்படுகின்றன. இவற்றிற்கு வர்ணமும் தீட்டப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலே கள் இறக்கும் தொழிலிலும் பலர் ஈடுபட்டிருக்கின்றனர். இது மிகவும் கஷ்டமான தொழிலாகும். மரத்தில் ஏறும்பொழுது அல்லது இறங்கும்பொழுது தவறி விழுந்தால், மரணம் ஏற்படுவது நிச்சயம்.

யாழ்ப்பாணத்தவர்களுக்கு உள்ள பிரச்னைகளில் சலவைத் தொழிலால் ஏற்படும் கஷ்டமும் ஒன்ருகும். இத்தொழிலைச் செய்பவர்கள் வண்ணுர் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றழைக்கப்பட்டனர். யாழ்ப்பாண நகரின் மத்தியிலுள்ள குளத்தில் அழுக்கு உடைகளை பத்துப் பதினைந்து பேர் தோய்த்துக் கொண்டிருப்பதைக் காணலாம். இவர்களுக்குக் கிடைக்கும் வேதனம் மிகக் குறைவு. இதனுல் இவர்கள் சேலைகளை மாற்றுக் கொடுத்து அல்லது நிலபாவாடை விரிப்பதற்குப் பயன்படுத்தி பணம் பெறுவதுமுண்டு. யாழ்ப்பாணத்திலே இயந்திர சாதனமூலம் சலவை செய்யும் தொழிலில் ஈடுபடுவோர் அதிக இலாபம் ஈட்டக் கூடும் என்பதிற் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணத்திலே பெரிய கைத்தொழில் என்று சொல்லக் கூடியது ஒன்றுதான் உண்டு. பத்து வருடங்களுக்கு முன் சிமெந்து செய்வதற்கு நிறுவப்பட்ட தொழிற்சாலையே 600 பேருக்கு வேலை கொடுக்கிறது. இதில் நவீன இயந்திர சாதனங்கள் உண்டு.

**கல்வி**

யாழ்ப்பாணத்திலே ஆங்கில மிஷனரிமாரும் அமெரிக்க மிஷனரிமாரும் கிறீஸ்தவர்களல்லாதவரைத் தமது சமயத்திற் சேர்த்துக் கொள்வதற்கு வாயிலாகக் கல்வி நிலையங்களை 1816 ம் ஆண்டளவில் ஆரம்பித்து வைத்தனர். எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு தேவாலயத்தைத் தவிர மற்ற ஒவ்வொரு புரொட்டஸ்தாந்த தேவாலயத்துக் கருகிலும் ஒரு பாடசாலையுண்டு. அநேக கத்தோலிக்க தேவாலயங்களுக்கருகிலும் பாடசாலைகள் உண்டு.

பிரித்தானிய அரசாங்கமும், ஆங்கிலம் கற்ற இளைஞர்கள் அரசாங்க சேவைக்குக் கிடைக்கத்தக்கதாக இருத்தற் பொருட்டு, 1830 ம் ஆண்டு தொடக்கம் கிறீஸ்தவ கல்வி நிலையங்களை ஆதரித்துவந்தனர். இதனுல் இலங்கை அரசாங்க சேவைக்கு மாத்திரமன்றி, மலாயா, பர்மா, இந்தியா முதலிய நாடுகளுக்கும் ஆங்கிலம் கற்ற இளைஞர்கள் செல்லக் கூடியதாக இருந்தது. இப்பொழுது இலங்கையில் பத்துசத விகிதத்தினர் ஆங்கிலம் எழுதப் பேசத் தெரிந்திருக்கின்றனர். ஆனுல் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இத்தகையினரின் விகிதம் கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 53 உயர்தர பாடசாலைகள் உண்டு. 18 இந்து சமயப் பாடசாலைகளும், 18 புரொட்டஸ்தாந்த பாடசாலைகளும், 9 அரசாங்கப் பாடசாலைகளும், 7 கத்தோலிக்கப் பாடசாலைகளும் 1 இராமகிருஷ்ணமிஷன் பாடசாலையுமுண்டு.

**உணவு**

யாழ்ப்பாணத்தவர்கள் சோறும் கறியும் பிரதான உணவாக உட்கொள்ளுகிறுர்கள். அநேகர் மாமிசம் உண்பதில்லை. இவர்கள் மிளகாயும் மிளகும் கூடுதலாக உபயோகிப்பதால் இவர்களுடைய கறிகள் காரசாரமாக விருக்கும். எனவே அந்நியர், இவற்றை முதலில் சாப்பிடுவது கஷ்டமாக விருக்கும். சோறு முக்கிய உணவாக இருப்பதால், அதனைத் தயாரிப்பது சிறிது கஷ்டம்தான். நெல்லிலிருந்து சோறு சமைப்பதற்கு முன் எத்தனையோ காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நெல்லை முதலில் அவித்து புழுங்கலாக்கிப் பின் குத்தி அரிசியையெடுத்து அந்த அரிசியை மீண்டும் வேகவைத்தபின்புதான் சோறு கிடைக்கிறது. ஆனுல் அரிசியிலிருந்து மா எடுக்க வேண்டுமானுல், நெல்லை அவிக்க வேண்டியதில்லை. நெல்லைக் குத்தி பச்சையரிசியாக்கி அதனை நனைய வைத்து மா இடிக்க வேண்டும். மாவை வறுத்து வைத்தாற்றுன் கொஞ்சக் காலத்துக்குப் பழுதுபடாமல் வைத்துப் பாதுகாக்க முடியும்.

இப்பொழுது மா அரைப்பதற்கும் நெல் குத்துவதற்கும் இயந்திரங்கள் உதவி புரிகின்றன. நெல் குத்தும் ஆலைகளும், மா, மிளகாய் அரைக்கும் தொழிற்சாலைகளும் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உண்டு.

யாழ்ப்பாண நகரில் நாள் ஒன்றுக்கு 10,000 இருத்தல் பாண் செலவாகிறது. அரிசி மாவினையே மக்கள் விரும்பியபோதிலும், கோதுமைமா மலிவாகவும் பாண் இலகுவாகவும் கிடைப்பதால், கோதுமைப் பாண் யாழ்ப்பாண மக்களின் உணவில் இடம் பெற்றுள்ளது.

**வீடுகள்**

யாழ்ப்பாணத்தில் மூன்று வகையான வீடுகள் உண்டு. அதிக செலவில் கட்டப்படும் வீடுகள் கொங்கிறீற்றினுல் கட்டப்பெற்று ஓடு போடப்படுகின்றன. மண் சுவர்க்கட்டி ஓலையால் வேயப்பெற்ற வீடுகளும் உண்டு. ஆனுல் இந்த ஓலைசளை அல்லது கிடுகுகளை இரண்டு வருடத்துக்கொருமுறை புதுப்பிக்கவேண்டும். இவற்றைத் தவிர கிடுகுகளால் அமைக்கப்பெற்ற குடிசைகளுமுண்டு. இந்தக்கிடுகுகள் வேலி அடைப்பதற்கும், தட்டிகள் கட்டுவதற்கும், உபயோகிக்கப்படுகின்றன.

**சுகாதாரம்**

தமிழர்களுக்கு சௌக்கியம் முக்கியமானதொன்றுகும். அவர்கள் ஒருவரை யொருவர் சந்தித்தால், " எப்படிச் சுகம் " எனச் சுகம் விசாரிப்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பெரிய ஆஸ்பத்திரி 1840 ம் ஆண்டில் அமைக்கப்பெற்றது. இங்கே இப்பொழுது 25 டாக்டர்களும் 300 தாதிமாரும் பணியாளரும் கடமையாற்றுகின்றனர். 440 படுக்கைகள் உண்டு. ஒவ்வொரு நாளும் ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர் சிகிச்சை பெறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஆயுள்வேத வைத்தியத்தையும் மக்கள் விரும்பிச் செய்விக்கின்றனர். இவர்கள் சத்திர சிகிச்சை செய்யாதிருந்தாலும், மூலிவகைகளை உபயோகித்துச் சில ஆயுள்வேத வைத்தியர் பெரும் புகழ் ஈட்டியுள்ளனர். போதிய ஆற்றலும் அநுபவமும் இல்லாத சிலர் வைத்தியஞ் செய்து ஆயுள்வேத வைத்தியத்தின் நற்பெயரைப் பழுதாக்குகின்றனர்.

நூறு வருடங்களுக்கு முன் கொள்ளை நோய்கள் பெருவாரியாகப் பரவுதல் சர்வசாதாரணமாகவிருந்தது. மக்களின் ஆயுட் காலமும் நீடித்திருக்கவில்லை. அக்காலத்தில் வாந்திபேதி ஒரு இரவிலேயே ஒரு குடும்பம் முழுவதையும் அழித்துவிடும்.

ஆனால் இப்பொழுது தகுந்த வைத்திய முறையினால் இறப்பு விகிதம் பெரிதும் குறைந்துவிட்டது. இலங்கையிலே பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது. டி. டி. ரி. மருந்து தெளித்து வந்தபடியால், மலேரியா ஒழிக்கப்பட்டுள்ளது. குஷ்டரோகமும் அருகிவருகிறது. கயரோகம் கட்டுப்படுத்தப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருவோரும், இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புவோரும், அவர்கள் வந்து சேர்ந்த முதல் இரு வாரங்களுக்கும் வைத்தியரால் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையினால், வாந்திபேதி, சின்னம்மை கொள்ளை நோய், முதலிய தொற்று நோய்கள் இலங்கையில் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் இந்தியாவில் பலர் இந்நோய்களால் இறக்கின்றனர்.

### கலியாண வழக்கங்கள்

இலங்கையிலே விவாகங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன என்பதை இங்கு வரும் மேனாட்டவர் அறிந்து அதிசயப்படுகின்றனர். ஒரு மணம் நிகழ்ந்தால் அது காதல் மணமா அல்லது ஒழுங்கு செய்யப்பட்ட மணமா என்ற கேள்வி சிலசமயங்களில் கேட்கப்படுகின்றது. "ஒழுங்கு செய்யப்பட்டது" என்ற மறுமொழியே பொதுவாகக் கிடைக்கிறது.

"உமது தகப்பனார் உமக்குக் கலியாணம் ஒழுங்கு செய்வதை நீர் விரும்புகிறீரா? என்று ஒரு கல்லூரியில் உயர் வகுப்பில் படிக்கும் மாணவியை இக்கட்டுரையாளர் ஒருமுறை கேட்டார். "என் தந்தையார் நான் சந்தோஷமில்லாத வாழ்க்கை நடாத்த ஏதாவது ஒழுங்கு செய்வார் என நான் கருதவில்லை" என்று கூறினாள். அவளுடைய மண வாழ்க்கை பின்னர் உண்மையிலேயே இன்பமானதாக இருந்தது. ஒரு பெண்ணுக்கு ஏற்ற கணவனைத் தெரிந்தெடுப்பதில் அநுபவமும் அறிவும் மணமுடித்தவருக்கா மணமுடியாதவருக்கா உண்டு என்ற கேள்விக்குரிய சரியான விடைதான் யாழ்ப்பாணத்திலும் இலங்கையிலும் இந்தியாவிலும் நிலவி வரும் கொள்கைக்கு ஆதாரமாகும்.

மேனாட்டினர் காதல் கொண்டு மணம் புரிகின்றனர். ஆனால் "நாங்கள் மணமுடித்து காதல் கொள்கிறோம்" என்று யாழ்ப்பாணத் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார்.

மணமகனையும் கலந்தாலோசிப்பது ஓரளவுக்கு உண்மைதான். இரண்டு மூன்று பெண்களில் ஒருவரைத் தெரிவு செய்யும்படி மணமகன் சில சமயங்களில் கேட்கப்படுவதுண்டு. எந்த முறையிலும் சிற்சில குறைபாடுகள் உண்டு. தனக்கு விருப்பமில்லாத ஒருவரை மணஞ் செய்து கொள்ளவேண்டும் என்று தங்கள் பிள்ளையைப் பெற்றோர் கட்டாயப்படுத்தினால், அல்லது ஒரு பிள்ளை ஒருவர் மீதுகாதல் கொண்ட பின் இன்னொருவரை மணந்து கொள்ளும்படி கட்டாயப் படுத்தினால், பெரிய குற்றங்கள் நிகழ்ந்து விடுகின்றன. சில சமயங்களில் காதலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். மேனாட்டில் கலியாணம் தள்ளப்படும் வீதத்திலும் பார்க்க இங்கு கலியாணம் தள்ளப்படும் வீதம் குறைவாயிருப்பது நோக்கத்தக்கது. மிகவும் அருமையாகவே கலியாணம் தள்ளப்படுகிறது.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரு கலியாணம் என்பது இரு தனிப்பட்டவர் ஒன்று கூடுவது என்பது அர்த்தமல்ல. இரு குடும்பங்கள் ஒன்று சேர்வதாகும். எனவே இவ்விரு குடும்பங்களையும் கலந்தாலோசிப்பது ஒருவகையில் பொருத்தமாகவே காணப்படுகிறது. யாழ்ப்பாணத்திலே பெண்களுக்குச் சீதனம் கொடுக்கும் வழக்கமுண்டு. இதற்கு முதன்மைகொடுப்பதால் சில சமயங்களில் கலியாணத்தின் புனிதத்தன்மை கெட்டு விடுகிறது. மணம் ஒழுங்கு செய்வதற்கு முன்னர் சாதகப் பொருத்தம் பார்க்கும் வழக்கம் உண்டு. ஆனால் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பொதுவாகச் சாதகப் பொருத்தம் பார்ப்பதில்லை. வறியவர்களும் தங்கள் இயல்புக்கேற்ப சீதனம் கொடுக்கின்றனர்.

பல்லி சொன்னால் பலன் பார்ப்பதும், சகுனம் பார்ப்பதும் யாழ்ப்பாணத்தவரிடையே காணப்படும் மூட நம்பிக்கைகளாகும். மாடுகளுக்குக் குறிசுடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமும் யாழ்ப்பாணத்தில் உண்டு. சிலர் இரவில் உப்பு, எண்ணெய், முட்டை ஊசி ஆகிய வற்றைக் கொடுக்க மாட்டார்கள்.

**சிலகுறிப்புகள்**

யாழ்ப்பாணத்தில் சிறு கடைகள் பல ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றில் அரிசி, மா, சீனி, தேயிலை, கோப்பி, உப்பு, தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய், சவர்க்காரம், மசாலைப் பொருட்கள், காய்கறிகள் முதலியன விற்பனையாகும். வறியவர்களுக்கும் இவை தேவைப்படுகின்றன.

பீற்றுட், கறட், கோவா, போன்ற மேனாட்டுக் காய்கறிகளும் இங்கே பயிர் செய்யப்படுகின்றன. உள்ளூர் காய்கறிகளும் கீரை வகைகளும் உண்டு.

குடா நாட்டின் வட கரையோரத்தில் அநேக குகைகள் உண்டு. இவை சிந்துபார்த்து என்ற பேர் பெற்ற மானுமி இவ்வூருக்கு வந்திருந்தபோது தங்கி யிருந்த குகைகளாகக் கருதப்படுகின்றன.

யாழ்ப்பாணக் கரையோரங்களில் இந்தியாவி லிருந்து பலர் கள்ளத்தனமாக வந்திறங்குவது இலங்கை அரசாங்கத்துக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. இவர்கள் சிறு வள்ளங்களில் பாக்குத் தொடுவாயைக் கடந்து யாழ்ப்பாணக் கரையோரங்களில் வந்திறங்கி இலங்கையில் இடம் பெற்றுவிடுகின்றனர். இலங்கையிலுள்ள கடற்படையின் ஒரு பிரிவினரும் பொலிசாரும் இவர்கள் வந்திறங்க முன்னர் அல்லது வந்திறங்கியதும் கைது செய்ய ஒழுங்குகள் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தவர்கள் பொதுவாக வாரத்துக் கொரு முறை நல்லெண்ணெய் தேய்த்து முழுகத் தவற மாட்டார்கள்; சிலர் இந்த எண்ணெயுடன் வேறு மூலிவகைகளைச் சேர்த்து உபயோகிப்பது முண்டு.

யாழ்ப்பாணத்திலே சனத்தொகை பெருகிவருகின்றது. ஆனால் விஸ்தரிப்புக்குப் போதிய நிலமில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் இந்தியாவிலுள்ள மிகக் கிட்டிய இடத்துக்குமுள்ள தூரம் 23 மைல்களாகும். 1954 ம் ஆண்டில் நவரத்தினசாமி என்ற வீரன் இந்தத்தூரத்தை நீந்திச் சென்று பெரிய சாதனையை நிலை நாட்டினார். இவர் புரிந்த வீரச் செயலுக்காக, எலிசபெத் மகாராணி இலங்கைக்கு விஜயஞ் செய்தபோது, மகாராணியாருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார்.

பண்டைக்காலத்தில் யாழ்ப்பாணத் துறைமுகத்திலிருந்து யானைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றப்பட்டன. இப்பொழுது அங்கே யானைகள் இல்லை.

யாழ்ப்பாணத்திலே இப்பொழுது எங்கேபார்த்தாலும் புதிய வீடுகள் காட்சியளிக்கின்றன. பனை மரக் கூடல்கள் அழிக்கப்பட்டு வீடுகள் கட்டப்படுகின்றன. வெளியூர்களில் இருந்தவர்கள் பலர் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் வீடு கட்டி வருகின்றார்கள். யாழ்ப்பாணத்திலே மீற்றர் பூட்டிய வாடகைக் கார்களும் அதிகரித்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்னுள்ள வீதி அகலமாக அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பிற் போலவே றோட்டின் மத்தியில் கார்களை நிறுத்திவைக்கும் முறை கையாளப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலே சிறந்த நூல்நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. மாநகரசபை இதில் அதிக அக்கறை காட்டிவருகின்றது.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஊர்

# புளியங்கூடல்

திரு. செ. இரத்தினம்

### அமைப்பு

பெயர்தான் புளியங்கூடலே தவிர இங்கு எண்ணி மூன்று அல்லது நான்கு புளியமரங்களைத்தான் காணலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அண்மையிலுள்ள சிறிய தீவுகளில் பெரியதீவாகிய வேலணைத்தீவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமமே மேற்கூறிய புளியங்கூடலாகும். முற்காலத்திலே பார்த்த இடமெல்லாம் புளிய மரச்சோலையாக இருந்தபடியால்தான் இப்பெயர் வந்ததென முதியோர்கள் கூறுகின்றார்கள். இக்கிராமத்தின் கிழக்கெல்லையாக வேலணையும் வடக்கெல்லையாகச் சரவணையும் மேற்கு எல்லையாகக் கடலும் தெற்கெல்லையாகச் சுருவிலும் உள்ளன. புகழ்பெற்ற மகாமாரி அம்மன் கோவிலொன்றும் இவ்விடம் இருக்கின்றது. மேற்கு எல்லைக்கு அருகாமையில் சுமார் இருபத்துஐந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள நீராடுவதற்குகந்த தடாகம் ஒன்றும் அமையப்பெற்றுள்ளது.

### மக்களும் தொழிலும்

இக்கிராமத்தில் வாழும் மக்கள் எல்லோரும் இந்து சமயத்தவர்களே. சுற்றுப்புறக் கிராமத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் வெளியூர்களுக்குச் சென்று வியாபாரத்தின் மூலம் பெரும் பணம் ஈட்டும் பொழுதும் இங்குவாழும் மக்களில் பெரும்பான்மையோர் விவசாயத்தையே தங்கள் பெரும் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றார்கள். சிலர் எழுதுவினைஞர்களாகவும், சிலர் ஆசிரியர்களாகவும் தொழில் பார்க்கின்றார்கள். இக்கிராமத்தில் படித்தவர்கள் குறைவென்றாலும் தற்போதைய இளைஞர்கள் படிப்பில் மிகவும் கவனஞ் செலுத்துகின்றார்கள். யாழ்ப்பாணத்தின் "கற்பகதரு" வாகிய பனையின் பிரயோசனத்தை முற்றிலும் பயன்படுத்துபவர்கள் இக்கிராம மக்களே. காலம் மாறிய பொழுதும் பண்டைய யாழ்ப்பாண மக்களின் உணவு முறைகளையே பின்பற்றும் இக்கிராம மக்கள், சுற்றுப்புறக்கிராமங்களிலுள்ள மக்களிலும் பார்க்க மிகுந்த பலசாலிகளாகத் திகழ்கின்றார்கள். இவ்விடம் உள்ள ஒவ்வொரு மாணவனும் தந்தைக்கு மிகவும் அடங்கி வாழ்கின்றான். கிராமத்திலுள்ள பெரியவர்களிடம் இளைஞர்கள் எல்லோரும் மிகவும் மரியாதையாகவே பழகுகிறார்கள். இதன் காரணமாக இவ்விடம் உள்ள படித்த இளைஞர்களில் ஒருவரிடமாவது புகைபிடிக்கும் வழக்கம் இல்லை.

### ஒற்றுமையும் கிராம முன்னேற்றமும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக உள்ள கிராமங்களில் புளியங்கூடல் ஒன்றாகும். இடையிடையே சிற்சிறு பூசல்கள் நடந்தாலும் காலப் போக்கில் எல்லாம் மாறிவிடுகின்றன. கொலை என்றால் என்ன என்பதைக் கூடத் தெரியாதவர்கள் இக்கிராம மக்கள். இங்குள்ள இரண்டு கிராமச் சங்கவட்டாரங்களுக்கும் அங்கத்தவர்கள் ஏக மனதாகவே தெரிவு செய்யப்படுகின்றார்கள். இங்குள்ள பெரியோர்களின் முயற்சியால் பெண்களுக்கு ஒரு நெசவுபாடசாலையும், மாதர் சங்கமும் தோன்றின. நெசவுபாடசாலை தோன்றி மூன்று வருடங்களுக்குள்ளேயே அதன் முன்னேற்றத்தையும், அங்கு நெசவு பயிலும் மாணவிகளினது ஊக்கத்தையும் வட பெரும்பகுதிக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. நடராசா அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள். இற்றைக்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இளைஞர்களின் பெரு முயற்சியால் உருவாகிய ஜனசமூக நிலையம் இன்றும் நன்றாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிராம முன்னேற்ற உத்தியோகத்தர்களினால் 1956 ம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் முதலாவது முன்மாதிரிக்கிராமமாக இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஐந்து நாட்களாகப் பெரிய விழாவொன்றும் நடைபெற்றது. சரவணை வேலணை மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகக் கட்டிடமும் இவ்விடமே அமையப்பெற்றுள்ளது. இக்கட்டிடத்தை முன்னாள் குடிசனமதிப்பு, புள்ளிவிபர இலாகா அதிபர் திரு. மாணிக்க இடைக்காடர் அவர்கள் திறந்துவைத்தார். இவ்விடம் மாதா சிசு பரிபாலன நிலையம் ஒன்றும் அமையப்பெற்றுள்ளது.

### இறை வழிபாடு

இக்கிராமத்தில் ஒரு மகாமாரி அம்மன் கோவில் ஒரு பிள்ளையார் கோவில், ஒரு வைரவர் கோவில், ஒரு வீரபத்திரர் கோவில் ஆகிய நான்கு கோவில்கள் மட்டுமே உண்டு. வருடந்தோறும் சித்திரை மாதத்தில் பிள்ளையார் கோவிலிலும் வைகாசி மாதத்தில் மகாமாரி அம்மன் கோவிலிலும் திருவிழாக்கள் நடைபெறும். பெரியோர்களுடைய முயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியால் ஸ்தாபிக்கப்பட்ட சைவமகாசபை இத்திரு விழாக்களின் போது மிகவும் உதவியாக இருக்கின்றது. இச் சைவமகாசபைக்கு ஒரு தொண்டர் படையும் இருக்கின்றது. இத்தொண்டர் படை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் திருவிழாக் காலங்களில் சுகாதார முறைகளைக் கண்காணித்தல், சன நெருக்கடியைத்தவிர்த்தல், இராக்காலங்களில் ரோந்து சுற்றுதல் முதலிய வேலைகளைத் திறம்பட நடாத்தக் கூடியதாக இருக்கின்றது. திருவிழாக்கள் நடைபெறுத மற்றிரு கோவில்களிலும் புண்ணிய தினங்கள் தோறும் யாகங்கள், பொங்கல் முதலியன நடைபெறுகின்றன. இதைவிட வெள்ளிக்கிழமை தோறும் பிள்ளையார் கோவிலில் பஜனை நடைபெறுகின்றது. சுற்றுப்புறக்கிராமங்களில் தொற்று நோய்கள் பரவும் பொழுது மகாமாரி அம்மன் கோவ.லில் விசேஷ ஆராதனைகளும் திருவிழாக்களும் நடைபெறும். அதன் பயனுகவோ என்னவோ சுற்றுப்புறக் கிராம மக்கள் தொற்று நோய்களால் அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருக்கும் அதே வேளையில் இக்கிராம மக்கள் யாதொரு விதமாயும் பாதிக்கப் படாமல் ஒருவித சலனமும் இன்றித் தங்கள் கடமைகளைக்கவனிப்பார்கள். அத்துடன் இக்கிராமத்தில் மலகூடமில்லாத வீடுகளை விரல்விட்டு எண்ணலாம்.

### விளையாட்டும் பொழுதுபோக்கும்

இங்குள்ள இளைஞர்களின் முக்கிய மூன்று விளையாட்டுக்கள், கரப்பந்தாட்டம், கிளித்தட்டு மறித்தல், வாரோட்டம் ஆகியவையே. கிளித்தட்டு மறித்தல், வாரோட்டம் ஆகிய விளையாட்டுக்களில் முதியோர்களும் பங்குபற்றுவார்கள். ஒன்றும் இயலாதவர்கள் சனசமூக நிலையத்தில் பத்திரிகை பார்ப்பதிலேயோ, விளையாட்டுக்களைப் பார்வையிட்டுத் தங்களுக்குப்பிடித்தமானவர்களை உற்சாகமூட்டுவதிலேயோ பொழுதைக் கழிப்பார்கள். தீவுப் பகுதியிலேயே மிகப்பலம் வாய்ந்த கைப்பந்தாட்டக் கோஷ்டிகளில் இக்கிராமக் கோஷ்டியும் ஒன்ருகும். தீவுப்பகுதியின், இயல் இசை, விளையாட்டுப் போட்டிகளில் மூன்று முறை தொடர்ந்து முதல் இடத்தைச் சுவீகரித்த பெருமை இக்கிராமத்தையே சாரும். இப்போட்டிகளில் பெண்களே அதிகமான இடத்தைக் கைப்பற்றிக்கொடுத்தார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரபல சைக்கிள் ஓட்ட வீரரும், ஒருமைல் ஓட்ட வீரருமான திரு. பாலகணபதிப்பிள்ளை இக்கிராமவாசியே. ஒற்றுமைக்குப் பெயர்போன இக்கிராமம் அண்மையில் ஏற்பட்ட சிற்சிறு பூசல்களால் பிளவுபட்டு நின்ருலும் கால ஓட்டத்தில் பிளவுகள் நீங்கி மேன்மேலும் முன்னேறும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இலங்கைச் சரித்திரக் கதைகள்:

# மாமன்மாரை விஞ்சிய மருமகன்

திரு. வை. முத்துக்குமாரசுவாமி

இந் நிகழ்ச்சி இற்றைக்கு 2330 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பந்துகாபயன் என்னும் மன்னனின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கின்றது. இலங்கை மன்னன் விஜயன் மரணத்தறுவாயில் சிங்கபுரத்தில் உள்ள அவனுடைய தம்பி சுமித்தனுக்கு ஒரு கடிதம் அனுப்பி, அவனிடம் தனது இராச்சிய பாரத்தை ஒப்படைக்க எண்ணினுன்.

விஜயன் இக்கடிதத்தை அனுப்பிய பின் மரணம் அடைந்தான். இதற்கிடையில் இவனது அமைச்சன் உபத்தீசன் அரசனுக ஆண்டான். அவன் உபத்தீச காமத்தில் சுமித்தன் விரைவில் வருவானென எதிர் பார்த்துக் கொண்டு இருந்தான்.

ஆனுல் சிங்கபுரத்தில் உள்ள சிங்கபாகு மன்னன் இறந்த பின் சுமித்தன் அரச பீடத்தில் அமர்ந்திருந்தான். அப்பொழுது தான் இலங்கையில் விஜய மன்னன் அனுப்பிய கடிதம் வந்தது.

அன்புமிக்க தம்பி சுமித்தனே !

ஈசுரன் உனக்கு இஷ்டமான சௌகரியங்களைப் பெற ஆசீர்வதிப்பாராக! நானே வயோதிபம் அடைந்துள்ளேன். காடு வா வா என்கிறது ; வீடு போ போ என்கின்றது என்பது எனது நிலைமைக்கு சரியான வர்ணனையாகும். எனது எழில் மிகுந்த இலங்கை இராச்சியம் விரைவில் மீகாமன் இல்லாத மரக்கலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஆகிவிடும். ஆகவே உடனே வந்து இந்த நாட்டின் அரசியல் பாரத்தை ஏற்கவும். வணக்கம் பல.

இங்ஙனம்,

உங்கள் அன்புள்ள அண்ணன்,

**விஜயன்.**

சுமித்தனுக்கு மூன்று மக்கள். அவர்களை அழைத்து உரையாடினான். பிரிய மைந்தரே! நான் கிழப்பருவம் எய்தி விட்டேன். அதை விட என் தந்தையின் இராச்சிய பரிபாலனத்தை ஏற்றுவிட்டேன். என் அண்ணனின் அழகான இலங்கைக்கு மன்னன் தேவைப்படுகிறது உங்களில் ஒருவர் அதனை ஏற்று நடத்த வேண்டும் என்பது எமது விருப்பம். யார் சித்தமாக இருக்கிறீர்?

ஆகஇளையவனான பாண்டு வசுதேவன்: "தந்தையே! நான் அந்தப் பொறுப்பை ஏற்கச் சித்தமாயுள்ளேன். எனக்குத் துணையாக அமைச்சர்களின் புதல்வர்களாகிய 32 பேரைத் தருவீர்"

சுமித்தன்: எனக்கு அவ்வாறே தரச் சம்மதம். இப்பணியை ஏற்று நீர் சரிவர ஆற்றுவீர்! இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவீராக! பாண்டு வசுதேவன் முப்பத்திரண்டு துணைவர்களுடன் சந்நியாசிகளைப் போல இலங்கைக்கு வந்து கொண்டிருந்தான். இதற்கிடையில் சுமித்தன் வராதபடியால் இலங்கையில் உபத்தீசனின் அமைச்சர்களிடம் கலக்கம் ஏற்பட்டது. ஒரு சோதிடனிடம் சோதிடம் கேட்கப்பட்டது. "இற்றைக்கு ஏழாம் நாள் இராசகுமாரன் வருவான்; அந்த வழித்தோன்றல் பௌத்த மதத்தை இந்நாட்டில் நிலைநாட்டுவான்".

சோதிடன் கூறியவாறே நடந்தேறியது.

**2ம் காட்சி**

புத்தர் பிரானின் தந்தையான சுத்தோதன மன்னனின் சகோதரன் மகனான பாண்டுக பில்வஸ்துவில் ஆண்டு வந்தான். அவனுக்கு ஆறு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். அவன் கங்கை நதியோரத்தில் வந்து குடியேறினான்.

அவனுடைய மகள் பத்தகச்சனா ஈடும் இணையுமில்லாத பேரழகி. அவளை மணக்கப் பலர் போட்டியிட்டுக்கொண்டு வந்தனர். அந்தக் கஷ்டநிலையினின்று தப்புவதற்காக பத்தகச்சனாவையும் முப்பத்திரண்டு தோழிகளையும் கப்பலொன்றில் ஏற்றிக் கடலில் விட்டு விட்டான் பாண்டு மன்னன். கப்பல் வட இலங்கையை வந்து அடைந்தது. இவர்கள் வந்து இறங்கிப் பெண் துறவிகளைப்போல வேடமணிந்து சென்றனர். பாண்டு வாசுதேவன் இவர்களைக் கண்டு பத்த கச்சனாவைத் தன் பட்டத்தரசி ஆக்கினான். இம்மன்னனின் 32 தோழர்களுக்கு அரசியுடன் வந்த 32 தோழிகளையும் மணஞ் செய்வித்தான்.

**3ம் காட்சி**

பாண்டுவாசன்

பத்த கச்சனா தம்பதிகளுக்கு பத்து ஆண்களும் ஒரு பெண்ணும் புத்திரபாக்கியங்கள். மூத்தவன் பெயர் அபயன். பெண்ணின் பெயர் சித்ரா. பேரழகியாகிய பத்தகச்சனாவைப் பார்க்கினும் எழில்வாய்ந்தவளாகத் திகழ்ந்தாள் இம்மங்கை சித்ரா. எழுதாத சித்திரத்தைப் போல இருந்தபடியால் இவள் சித்ரா எனப்பெயர் இடப்பட்டாள். பார்ப்பவர்கள் மனத்தைப் பேதலிக்கச் செய்யும் அல்லது உன்மத்தம் செய்யும் சக்தி இவளிடம் இருந்தது. ஆனபடியால் இவளை உன்மதச் சித்ரா என்றழைத்தனர் மக்கள்.

ஒருநாள் அரண்மனைக்கு ஒரு பெயர்போன சோதிடர் வந்தார். அவரிடம் அரண்மனையில் உள்ள அரச குமாரர்களது சாதகங்களும் கொடுக்கப்பட்டன.

அரசன்: கண்ணியம் மிக்க சோதிடரே! இதோ என் மகள் சித்ராவின் ஜெனனக் குறிப்பு. அவள் எதிர்காலத்தைப்பற்றி ஆராய்ந்து கூறுங்கள்.

சோதிடர்: வேந்தே! நான் வடமொழியில் உள்ள நூல்களைக் கற்றுள்ளேன். அறிவின்படி நான் உள்ளதைக் கூற என்மனம் கூசுகின்றது.

அரசன்: சோதிடரே! இந்த சோதிடத்தில் எனக்குத் திடசித்தமான நம்பிக்கை யுண்டு. நீங்கள் தாராளமாக உள்ளதை உள்ளவாறு கூறும்படி கோருகிறேன்.

சோதிடர்: புவிபோற்றும் இலங்கை மன்னா! இப்பெண் சித்ராவின் வயிறறில் பிறக்கும் ஆண் பிள்ளை அவள் மாமன் மார்களில் ஒன்பது பேர்களைக் கொலை செய்து, சிம்மாசனம் ஏறுவான். அவன் காலத்தில் இலங்கை மகோந்நதமான நிலையை அடையும்.

(கலவரம்) (பலர் பேசும் ஒலி)

அரசன்: சரி சோதிடரே! இதனைப்பற்றி ஒருவருக்கும் சொல்லாதீர்கள். சித்ராவுக்கு இது தெரியவே கூடாது, எச்சரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4 ம் காட்சி

பாண்டுவாசு தேவனின் பத்துப் புதல்வர்களும் மன்னனும் இரகசிய மகாநாடு கூடினர்.

பாண்டு வாசுதேவன் : மைந்தரே ! சோதிடர் கூறியதைக் கேட்டீர்களா ? இப்பொழுது என்ன செய்ய வேண்டும் ? ஆலோசனை கூறுங்கள்.

ஒன்பது மாமன்களும் : சித்ராவை ஒரே வெட்டாக இரண்டு துண்டமாக்கி விடுவதே எமது யோசனை

அபயன் : சோதரரே ! ஆத்திரப்பட வேண்டாம். எனக்கு நல்லதோர் யோசனை தோன்றுகின்றது. சித்ராவுக்குக் கல்யாணம் செய்யாமல் அவளைக் கன்னிப் பெண்ணாகவே வைத்திருப்போம். கட்டுக் காவல்களுடன் அவள் கைதியைப்போல அரண்மனையிலேயே இருக்கட்டும்.

ஒன்பது மாமன்மாரும் : மூத்த அண்ணா ! சித்ராவை ஆண்களுடன் பழக சந்தர்ப்பமே அளிக்கக் கூடாது. அவளைக் கன்னி மாடத்தின் மூன்றும் மாடியில் சிறைவைப்போம்.

அபயன் : சந்திரிகா என்னும் தோழிப்பெண்ணை அவளுக்குத் துணையாக வைப்போம் !

பாண்டுவாசன் : அப்படியே செய்யுங்கள் சோதிடர் கூற்றை நம்பித் தனது வாழ்க்கையைச் சீர் குலைக்கிறார்களே என்ற துக்கம் சித்ராவுக்கு இருக்கத் தான் செய்தது. ஆயினும் அருமை அண்ணன்மாருக்கு அபாயம் ஏற்படச் செய்தல் ஆகாது என அவள் நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போலாயிற்று.

### 5 ம் காட்சி

உன்மத்த சித்ராவின் பேரழகைப்பற்றி இவளது மாமன் மகன் திககாமினி பரத நாட்டிலேயே கேள்விப்பட்டிருந்தான். அவன் ஈழத்துக்கு தனது தந்தையுடன் வந்தான். சிறையில் இருந்த சித்ராவை எப்படிச் சந்திக்கலாம் எனச் சிந்தித்த வண்ணம் இருந்தான். ஒரு நாள் யன்னல் அருகில் இருந்த சித்ரா இந்த யுவனைக்கண்டு விட்டாள். அவள் இவனை மணம் செய்வதெனில் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போன்றதாக இருந்தது. ஒருநாள் யன்னல் அருகில் இருந்த சித்ரா இந்த யுவனைக் கண்டு விட்டாள். அவன் இவளை மணம் செய்ய விரும்புவதாக சித்ராவின் தோழி சந்திரிகா சித்திராவுக்குத் தெரிவித்தாள். சித்ராவை திககாமினி அவ[...]ர் சிறைச்சாலையில் இரகசியமாகச் சந்தித்தான். [...]ள் காதலர்களானார்கள். இவர்கள் இருவரின் [...] சந்திப்பு முதலில் மாமன்மார் ஒருவருக் [...]தெரியாது.

### 6 ம் காட்சி

சித்ரா ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிறாள் என்னும் செய்தி உபத்தீச கமத் தலைநகரைக் கலக்கியது. அரச குடும்பத்தாரின் மகா நாடு கூட்டப்பட்டது. பாண்டு வாசுதேவன், அபயன், சகோதரர்கள் யாவரும் கூடி ஆலோசித்தனர்.

அபயன் : தந்தையே ! சித்ரா தாய் ஆகிவிட்டதற்காகக் கவலை வேண்டாம் இப்பொழுதும் காரியம் மிஞ்சி விடவில்லை. சித்ரா தனது சொந்த மைத்துனனையே வரித்துக் கொண்டாள்.

மற்றைய சகோதரர்கள் : சோதிடன் கூறியதை மறந்து விட்டீர்களா ? இவளுக்கு ஆண்பிள்ளை பிறந்தால், பிறந்த உடனேயே அக்குழந்தையைக் கொன்று விடுவோம்.

அபயன் : நல்லது ! அப்பிள்ளை பெண்பிள்ளையானால்

எல்லாரும் : பிழைக்கட்டும் அண்ணா அவ்வாறு செய்வோம். நீண்ட ஆலோசனையின் பின் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. தங்கை சித்ராவின் மூத்த அண்ணன் அபயனுக்கு மிக்கப் பிரியம். அவளுடைய சுகத்தை விசாரிக்க அவன் அடிக்கடி அவளைப் பார்க்க வருவதுண்டு. அரசன் பதவியை அடைந்த அபயன் சித்ராவைக் காணப் போயிருந்தான்.

சித்ரா : பெரிய அண்ணா ! எனக்கு ஆண் குழந்தை பிறந்தால் அதைக் கொல்லத்தான் வேண்டுமா ? குழந்தை உயிருடன் இருக்க வேறு வழி கிடையாதா ?

அபயன் : சித்ரா ! என் அருமைத்தங்கையே ! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே உனக்கு ஆண் குழந்தை கிடைக்குமானால் அதனைக் காப்பாற்றுவது என்னுடைய பொறுப்பன்றோ ?

சித்ரா : ஏதோ உங்களைத்தான் நம்பியிருக்கின்றேன். அண்ணா ! நீங்கள் நினைத்தால் சர்வமும் முடியும்.

### 8 ம் காட்சி

சித்ராவுக்கு அரண்மனையில் கட்டுக்காவல் பல மடங்கு ஆயிற்று. அபயனின் ஏற்பாட்டின்படி சித்ராவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மருத்துவப் பெண் ஒருத்தி அமர்த்தப்பட்டிருந்தாள். சித்ரா நல்ல சுபமுகூர்த்தத்தில் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திககாமனி சந்திரிகாவின் உதவியால், வேறு ... ராமத்தில் இருந்து மூன்று நாட்களுக்கு முன் ... பெண் குழந்தையை சித்ராவின் பக்கத்தே ... பித்தான். சித்ராவின் ஆண் குழந்தையை ... கூடையில் எடுத்துக்கொண்டு சென்றுள் சந்திரிகா ஒரு காய்கறி விற்கும் பெண்ணிடம் அபயன் முன் ஏற்பாட்டின்படி கொடுத்து ஆயிரம் பொற்காசுகளையும் அக்குழந்தையுள்ள கூடையையும் கொடுத்தாள். இக்குழந்தையைக் கூடையில் கொண்டு போகும் வழியில் ஓர் ஓசை கேட்டது.

இராசகுமாரர்கள் : நில் ! உயிர் மேல் ஆசை இருந்தால் அப்படியே நில் !

ஒருவன் : கூடையில் என்ன ஆய்ச்சி இறக்கு பார்க்கலாம்.

கூடையுடன் சென்ற பெண் : ஐயா ! நான் அடுத்த கிராமத்தில் விற்கும் பலகாரம் கொண்டு போகிறேன் ?

மற்றொருவன் : இங்கேயே எங்களுக்கு விற்றுவிடு எங்களுக்கோ கடும்பசி, கூடையைக் கீழே இறக்கு அதற்கிடையில் இரண்டு பெரிய காட்டுப்பன்றிகள் உறுமிக் கொண்டு அவர்களை நோக்கி வந்தன.

(பன்றிகள் உறுமுகின்ற ஓசை)

கூடை கொண்டு சென்ற பெண்ணையும் பலகாரத்தையும் மறந்து இளவரசர்கள் காட்டுப் பன்றிகளைத் துரத்திக்கொண்டு வேட்டை ஆட ஓடினுர்கள்.

### 9ம் காட்சி

கூடையுடன் வந்த பெண் : எம்பெருமானே ! ஒரு மயிரிழையில் தப்பினேன். அபயன் சொற்படி துவாரவ மண்டபத்துக்குச் சென்று இப் பிள்ளையை ஆட்டு இடையனிடம் கொடுத்து விடுவேன். ஐந்நூறு பொற்காசுகளை நான் செய்த உதவிக்காக எடுத்துக் கொண்டு எஞ்சிய ஐந்நூறு அந்த ஆட்டு இடையனிடம் கொடுத்து விடுவேன். அவ்வாறே அப்பெண் செய்தாள். வேட்டையாடச் சென்ற இளவரசர்கள்அரண்மனைக்குத் திரும்பியபொழுது சித்ராவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவிற்று. சித்ராவின் பிள்ளை அவளுடைய பேரன் பாண்டுவினுடைய பெயரையும் தமயன் அபயனின் பெயரையும் சேர்த்து பந்துகாபயன் என்னும் பெயருடன் வளர்ந்து வந்தான். இதற்கிடையில் மாமன்மார் சித்ராவுக்கு பிறந்தது ஆண்மகவு எனவும் அக் குழந்தை எங்கேயோ வளர்ந்து வருகிறதென வும் அறிந்தனர். இவன் வயதாக இருக்கும் பொழுது இவன் இருந்த இடத்தை உளவு வைத்துக் கண்டு பிடித்துவிட்டனர். இவன் குறித்த குளமொன்றுக்கு நீராடப் போவதும் அக்குளத்திலே ஒருவருக்கும் தெரியாதவாறு மரப்பொந்தினில் ஒளித்திருப்பதும் பிறகு ...ருவதும் வழக்கம். ஒருநாள் அவனுடைய மா...ன்மார் இவனைக் கொல்லுவதற்காக அக் குள... ...ளிக்க வந்த சிறுவர் யாவரையும் ... ...னர். பந்து காபயனே வழக்கம் போல் ...ளித்துக் கொண்ட படியால் பிழைத்தான். அவன் பன்னிரண்டு வயது வரையும் ஆட்டிடையனின் ஆதரவில் இருந்து வந்தான். மீண்டும் மாமன்மார் பந்துகாபயன் இடைச்சேரியில் உயிருடன் இருக்கிறுன் என்று கேள்விப் பட்டனர் ஆகவே இடையர்கள்யாவரையும் கொல்லத்திட்டம் செய்தனர். இவர்களைக் கொல்ல வந்த அன்று அதிர்ஷ்ட வடமாக பந்துகாபயன் வேறொரு கிராமத்துக்கு நெருப்பு எடுத்துக் கொண்டு வரும்படி சென்றிருந்தான் ஆகவே மீண்டும் தப்பினுன்.

பந்துகாபயன் பதினாறு வயதாக இருக்கும் பொழுது அவனுடைய உன்மத சித்ரா தாய் ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தனுப்பி யிருந்தாள். தென்னிலங்கையில் உள்ள பந்துலாகமகா என்னும் கிராமத்தில் உள்ள பந்துலன் என்னும் பிராமணனிடம் பந்துகாபயனை அனுப்பிவைக்கும்படி வளர்ப்புப் பிதாவிடம் ஏற்பாடுகள் செய்தாள்.

பந்துகாபயன் பந்துலனைச் சந்தித்தான்

### 10 ம் காட்சி

பந்துலன் : வருக அன்பரே ! நீர்தானு பந்துகாபயன் ?

பந்துகாபயன் : ஆம், நான் பந்துகாபயன்.

பந்துலன் : வாழ்க ! கொற்றவ ! ஈழநாட்டு மன்னவனுக திகழ்வீர்கள் என்று உங்கள் தோற்றமே சிறந்த மன்னவனுக்கு உரிய லட்சணங்கள் யாவற்றுடனும் நீர் பொலிந்து விளங்குவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி கொடுக்கிறது.

பந்துகாபயன் : சுவாமி வணக்கம். உங்களிடம் கற்க வேண்டிய வித்தைகள் பல உண்டு. அவற்றை எனக்குக் கற்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்துலன் : இராசமைந்தனே ! இதோ இருக்கும் என் மைந்தன் சந்திரன் கண்ணும் கவசமும் போல் உனக்கு உறுதுணை புரிவான்.

பந்துகாபயன், இராச வித்தைகளான வாள் பயிற்சி குதிரை யேற்றம், வில்லாண்மை, யானை யேற்றம், முதலியன யாவற்றையும் அதி விரைவில் கற்றுத் தேர்ச்சியடைந்தான். பொற்காசுகள் பெருவாரி யாகச் செலவழித்து பல போர்வீரர்களைத் திரட்டிக் கொடுத்தான் இந்த அந்தணன்.

### 11 ம் காட்சி

பந்துலன் : பாண்டு அபயா ! நீ அரசாள வேண்டிய காலம் வந்துவிட்டது. உனக்காகத் திரட்டி வைத் திருக்கும் படையுடன் போருக்குப் புறப்படு. என் மகனை முதல் அமைச்சன் ஆக்குவீர்.

பந்துகாபயன் : என் அன்பார்ந்த ஆத்மீக தந்தையே! தந்தையினும் தயைவுடையீர் ! தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பதை உங்கள் தனயன் மறக்க மாட்டேன்.

பந்துலன் : பந்துகாபயனே ! மற்றொன்று கூற விரும்புகிறேன். எந்தப் பெண்ணின் கைபட்ட வுடன் இலை தங்கமயமாக மாறுவதை நீ காண் பாயோ அவளே உன் மனைவியாவாள். போய் வாரும் இறைவன் துணை. பந்துகாபயனும் சந் திரனும் போருக்குக் கிளம்பினார்கள்.

முதலில் பந்துகாபயனின் மாமன்மார்களில் ஒருவனுன கிரிகந்த சிவனது நிர்வாகத்தில் இருந்த பிரதேசத்தை அடைந்தான். கிரிகந்த சிவன் விவ சாயிகள் நடத்திய அறுவடை விழாவில் பங்கு பற்றச் சென்றான்.

பந்துகாபயன் இதனை உளவு வைத்து அறிந்து தனது வண்டியை அவளுக்கு அருகாமையில் செலுத் தினான்.

பந்துகாபயன் : ஓ ! மங்கையே ! எங்கே செல்கின் றாய் ? எனக்குப்பசியாக இருக்கிறது கொஞ்சம் உணவு தருவீரா ? பாலி அவனைக்கண்டு அவன் அழகைப் பார்த்துதான் கொண்டு வந்த பல காரங்களில் சிலவற்றை ஓர் இலையில் இட்டுக் கொடுத்தாள். அவள் தொட்டவுடன் அந்த இலை தங்கமானது கண்டான். அவளே தனது அரசி யாகவேண்டும் எனத்திடசங்கற்பம் செய்தான். தான் சித்ராவின் மகன் என்றும் தன்னை அவளை மணக்கும்படியும் வேண்டினான். அவளும் அது முறையே எனக்கண்டு அதற்கு இசைந்தனள். கிரிகந்த சிவன் யுத்தம் செய் தான். பந்துகாபயன் அவனை வென்று விட அவன் இவன் பக்கம் ஆனான். பின்பு பந்து காபயன் தும்மருக மலையடி வாரத்தில் இவனு டைய ஒன்பது மாமன்மாருடனும் யுத்தம் செய் தான். அவர்களைப் போரில் வென்றான்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட அபயன் இவனுக்கு ஆயிரம் பொற்காசுகளையும் அவனுக்கென ஒரு பகுதி இராச்சியத்தையும் அளித்தான்.

பந்துகாபயன் தும்மறக மலையடிவாரத்தில் ஒரு குதிரை வடிவமாகத் திரிந்த சேதியா என்னும் இயக்கினியை அடக்கினான். பின்னர் அறித்தாமலை யடியில் தனது மாமன்மாருடன் யுத்தம் செய்தான். அவர்கள் அனைவரின் தலைகளையும் அறுத்து ஒரு மலைபோல குவித்தான். பின்பு அவனது பெரிய மாமாவாகிய அநுரதன் வசித்த அநுரதபுரத்துக் குச் சென்று அதனைத் தலைநகரம் ஆக்கினான். அங்கு சுவர்ணபாலியோடு அவன் அரசபரிபாலனம் செய் தான். சந்திரனை முதல் அமைச்சனாக்கினான்.

பட்டவிழா கோலாகலமாக நடைபெற்றது. பந்து காபயன் இயக்க அரசர்களுக்கு தனக்குச்சமமான பீடங்களில் அரச மாளிகையில் இடம் கொடுத்தான். அவன் இந்து சமயயிகளையும், சமண சமயத்தவர் களையும் பிறரையும் ஆதரித்து வந்தான்.

அநுரதபுரத்தில் விசாலமான வீதிகளையும், மதி லையும் அமைப்பித்தான். நகர மக்களுக்கென பச வக்குளம் எனப்படும் திசைவாவி, அபயக்குளம் என்பவற்றை அமைப்பித்தான். இந்நகரிலும் புறத் திலும் பல வைத்தியசாலைகளையும் பிரசவசாலைகளை யும் இம்மன்னன் கட்டுவித்தான். அநுரதபுர நகரத் தைச் சுத்தப்படுத்துவதற்கெனச் சண்டாளரை நிய மித்தான். இவர்களுக்கென ஒரு பிரதேசத்தை ஒதுக்கிக் கொடுத்தான்.

இம்மன்னன் இலங்கையின் கிராம எல்லைகளை நிர்ணயஞ் செய்தான். இத்தேசத்தை இராசறட்டை, மயாறட்டை, உறுகுணைறட்டை என மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரித்தான். பந்துகாபயனே கிராம அபிவிருத்தி இயக்கத்திற்குத் தந்தையாக விளங்கி யவன். இம்மன்னன் கி. மு. 372 தொடக்கம் கி.மு. 302 வரையும் 70 ஆண்டுகளாக ஆட்சி செய்தான். இவனுக்குப்பின் 1500 ஆண்டுகளாக அநுரதபுரம் தலைநகரமாக விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...priate Technology Services
121, POINT ... O ROAD
NALLUR, JAFFNA
No.

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

## தமிழில் சட்ட சம்பந்தமான நூல்கள்

முற்றொடர்ச்சி

| | விலை ரூ. | விலை ச. | தபாற் செலவு ரூ. | தபாற் செலவு ச. |
|---|---|---|---|---|
| 17. 1946 ம் ஆண்டின் 5 ம் இலக்க ஸ்தல அரசாங்க சேவைச் சட்டத்தின் பொருட்டுப் பிரமாணங்கள் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 1 | 10 | 0 | 10 |
| 18. 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்க ஊர்ச் சங்கங்கள் சட்டம் .. | 2 | 90 | 0 | 35 |
| 19. 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்க நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. | 1 | 10 | 0 | 35 |
| 20. 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. .. .. | 1 | 50 | 0 | 35 |
| 21. 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 | 10 | 0 | 10 |
| 22. 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறுப்புப் பதிவுச் சட்டம் .. | 1 | 35 | 0 | 35 |
| 23. 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறுப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 | 15 | 0 | 10 |
| 24. 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறுப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 | 10 | 0 | 10 |
| 25. 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்க கடை காரியாலய ஊழியர்கள் (வேலை வேதனங்கள் ஒழுங்குபடுத்தற்) சட்டம் .. .. | 1 | 45 | 0 | 35 |
| 26. 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டத்தின்கீழ் தொகுக்கப்பட்ட பிரமாணங்கள் .. .. | 1 | 65 | 0 | 35 |
| 27. 1956 ம் ஆண்டின் 37 ம் இலக்க கட்டணம் விதிக்கும் தொழில் இணைத்தாபனச் சட்டம் .. .. | 0 | 30 | 0 | 10 |
| 28. 1956 ம் ஆண்டின் 47 ம் இலக்க பெண்களையும் இளம் ஆட்களையும், பிள்ளைகளையும் வேலைக்கமர்த்துதற் பற்றிய சட்டம் .. | 0 | 60 | 0 | 20 |
| 29. 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் .. | 0 | 85 | 0 | 20 |
| 30. 1957 ம் ஆண்டின் 48 ம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம் | 1 | 60 | 0 | 35 |
| 31. 1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. | 1 | 15 | 0 | 35 |
| 32. 1958 ம் ஆண்டின் 10 ம் இலக்க இணக்கச் சபைச் சட்டம் .. | 0 | 30 | 0 | 10 |
| 33. 1958 ம் ஆண்டின் 15 ம் இலக்க ஊழியர் சேமநிதிச் சட்டம் .. | 0 | 70 | 0 | 20 |

**குறிப்பு.**—அரசாங்க வெளியீட்டு அலுவலக அத்தியட்சர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு, என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org